Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 5 (19-03-1998) வியாழக்கிழமை UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்: 96

# கிருஷாந்திவழக்கு எதிரிகளான சிப்பாய்கள் இருவர் தப்பினர்!



அப்ப வேலியே பயிரை மேய்ஞ்ச கதைதான் போல......!

## மேல் நீதிமன்றில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு, மார்ச் 19

கிருஷாந்தி கொலை வழக்கு எதிரிகளான சிப்பாய்களில் இருவர் நேற்று தப்பிச் சென்று விட்டனர். இவர்களைத் தேடும் நடவடிக்கையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் ஈடுபட்டிருந்த போதும் பயன் எதுவும் கிட்டவில்லை.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இச்சம்பவம் நேற்று இடம் பெற்றது.

கைதடிமாணவி கிருஷாந்தி குமாரசாமியை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாகவும் அவரையும் அவரது சகோதரர், தாயார் மற்றும் அயலவர் ஆகியோரைக் கொலை செய்ததாகவும்— இந்த வழக்கில் எட்டுச் சிப்பாய்கள் குற்றஞ்சாட்டப் பட்டிருப்பது தெரிந்ததே.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

மேல் நீதிமன்ற நீதிபதிகளான நிமல் ஈ. திஸநாயக்க, அன்ட்ரூ சோமவன்ச, காமினி அபேரத்தின ஆகியோர் முன்னிலையில் ட்ரயல் அட்பார் முறையில் விசாரணை நடந்து வரும் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள எட்டு சிப்பாய்களையும் சிறைச்சாலை அதிகாரிகள் நேற்று நீதிமன்றத்துக்குக் கொண்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுச் சத்தத்தால் கொழும்பில் பதற்றம்!

கொழும்பு, மார்ச். 19

கொழும்பு துறைமுகத்தில் நேற்று மாலை கேட்ட குண்டு வெடிப்புச் சத்தத்தால் நகரில் பரபரப்பு ஏற்பட்டது.

கொழும்பு துறைமுகத்தில் சிகரட் லைட்டர்கள் கொண்ட கொள்கலன் ஒன்று திடீரென வெடித்ததே இதற்குக் காரணம்.

தற்போது காணப்படும் அதிஉச்ச வெப்பக் கால நிலையே அந்தக்கொள்கலன் வெடிக்கக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொள்கலன் வெடித்தபோது ஏற்பட்ட தீச்சுவாலை அண்மையில் அமைந்திருந்த கடற்படைத் தளத்தை தாக்க முன்பே தீயணைக்கும் படையினர் தீயை அணைத்து விட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-10)

## பிரபா உட்பட நால்வரை சர்வதேசப் பொலீஸார் தேடுவதாகத் தகவல்

கொழும்பு, மார்ச். 19

விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் மற்றும் அவரது 4 சிரேஷ்ட உதவியாளர்களையும் கைது செய்யுமாறு 'இன்டர்போல்' எனப்படும் சர்வதேச பொலீஸார் அவசர பணிப்புரையை விடுத்துள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பொலீஸாரால் தேடப்பட்டு வருவோரில் விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன், அந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரையில் குண்டு வீச்சு!

மட்டக்களப்பு, மார்ச் 19

மட்டக்களப்பு மாவட்டம் வாகரை பிரதேசத்தில் நேற்றுக்காலை விமானத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது இத்தாக்குதல்கள் இடம்பெற்றதாக பாதுகாப்புத் தரப்பு தெரிவிக்கிறது.

ஆனால் விமானத் தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினரொருவர் உயிரிழந்து மற்றொருவர் காயமடைந்தார் என்றும்—

4 பாடசாலை மாணவர்கள் காயமடைந்துள்ளனர் என்றும்—

அப் பிரதேச வாசிகள் சுமார் 2 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவித்தன. (இ-21)

## அன்னை பூபதி நினைவு நாள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

இந்திய அரசிடம் நீதி கேட்டு கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் உண்ணா நோன்பு இருந்துசாவடைந்த அன்னை பூபதியின் நினைவு கூரல் நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றன — என்று புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

இந்திய அரசிடம் நீதி கேட்டு 19-3-88இல் உண்ணா விரதம் ஆரம்பித்த அன்னை பூபதி கோரிக்கைகள் பூர்த்தியாகாத நிலையில் 19-4-88 இல் மரணமானார். (இ-3)

# அரசுக்கு எதிராக கொழும்பில் ஐ.தே.க. நேற்று ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, மார்ச் 19

அரசின் ஜனநாயக விரோத செயல்களைக் கண்டித்தும் —

மக்கள் மீது சுமத்தப்படும் பொருளாதாரச் சுமைகளை எதிர்த்தும் —

ஐ. தே. க. நேற்று நண்பகல் 12 மணிக்கு விகாரமாதேவி பூங்காவில் சத்தியாக்கிரகத்தையும், பின்னர் எதிர்ப்புப் பேரணியையும் மேற்கொண்டது.

ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நண்பகல் விகாரமாதேவி பூங்காவில் கூடிய சுமார் 10 ஆயிரம் பேர் அங்கு சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

அதன் பின்னர் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி அரசுக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பியபடி லிப்டன் சுற்று வட்டம் ஊடாகப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பலர் வீதிகளில் அமர்ந்து மறியலிலும் ஈடுபட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாகனங்களில் வந்தோர் தடுத்து நிறுத்தப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 19

கொழும்பில் ஐ. தே. க. நடத்திய சத்தியாக்கிரக மற்றும் ஆர்ப்பாட்டப் போராட்டங்களில் பங்குபற்ற புத்தளத்தில் இருந்து வாகனங்களில் வந்தவர்களை நீர்கொழும்பு பொலீஸார் தடுத்து நிறுத்திவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நீர்கொழும்பில் பொலீஸாரால் தடுத்து நிறுத்தப்பட்ட ஐ. தே. க. ஆதரவாளர்களிடம் இருந்த சுலோக அட்டைகள், பதாகைகள் யாவும் பொலீஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் —

அவர்கள் கொழும்பு செல்ல அனுமதிக்கப்படவில்லை எனறும்— ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சட்டத்துக்கு முரணான செயல் குறித்து பொலீஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்ய விருப்பதாக ஐ. தே. க. வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## திருமலை—காங்கேசன் பயணிகள் கப்பல் சேவை இனி இல்லை

### பாதுகாப்பு அமைச்சு முடிவு

திருகோணமலை, மார்ச் 19

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை மறு அறிவித்தல் இன்றி இடை நிறுத்துவதென்று நேற்று கொழும்பில் நடந்த பாதுகாப்பு அமைச்சு மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

காங்கேசன்துறைக்குப் பொருள்கள் ஏற்றி வந்த ''லங்காமுடித'' கப்பலை இருதடவைகள் சேவையில் ஈடுபடுத்தி 2 ஆயிரம் பயணிகளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வர பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்தபடி அக்கப்பல் 2 ஆயிரம் பயணிகளைக் காங்கேசன்துறைக்கு ஏற்றி வந்தது.

நேற்று காங்கேசன்துறை வந்த இக்கப்பலை இன்னும் ஒரு தடவை சேவையில் ஈடுபடுத்தி மேலும் ஆயிரம் பேரை அழைத்து வர அனுமதி கோரப்பட்டது.

நேற்று நடந்த பாதுகாப்பு அமைச்சு கூட்டத்தில் இது பற்றி ஆராயப்பட்டு மறு அறிவித்தல் வரை சேவையை இடைநிறுத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது. (உ-21-3)

## தாக்குதலில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

நவக்கிரிப் பகுதியில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் காயமடைந்ததாக தம்பு இராசநாயகம் (வயது 30) என்பவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஷெல் வீச்சில் 24 படையினர் காயம்

வவுனியா, மார்ச் 19

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஷெல்தாக்குதலில் 24 படையினர் காயமடைந்துள்ளனர் என்று ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

படையினருக்கு மேலும் சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை பாக்கியம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாக்கியம் 16–03–1998 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சின்னையா தங்கம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் (பட்டு) அன்பு மனைவியும், பூரணத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்வரட்ணம், செல்வா, ஜெகதீசன் (சோதி V. S. B. Group பங்காளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கா, திருஞான சம்பந்தர் (R. D. A, வவுனியா), தயாழினி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற திரு. திருமதி இராமலிங்கத்தின் மருமகளும், சேனாதிராசா, கண்மணி, புலேந்திரன், அழகம்மா ஆகியோரின் மைத்துனியும், விஜியாழினி விஜிஜெயந்தினி, செல்வநீசதுஷிந் (யா/பரிஜோவான் கல்லூரி), துஷாந்தினி, துளசினி (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19 — 03 — 1998) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் (பழைய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
செ. ஜெகதீசன்
(மகன்)
( V. S. B. Group Jaffna )

103/1, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

( சி/3141 )

## செல்வன் கனகநாயகம் திருக்குமரன் (பாபு)

பண்ணாகத்தைச் சேர்ந்த செல்வன் கனகநாயகம் திருக்குமரன் (பாபு) 17-03-1998 செவ்வாய்க்கிழமை கனடாவில் அகால மரணமானார்.

இவர் கனகநாயகம் (உரிமையாளர், சர்மிலா இன்ஸ், கொழும்பு) அமரர் அன்னபூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், அருட்குமரனின் (கோபு—கொழும்பு) பாசமிகு அண்ணாவும், சின்னையா நாகம்மா, சோமசுந்தரம், மகேஸ்வரி ஆகியோரின் பேரனும், திருச்செல்வம்—யோகலட்சுமி தம்பதிகளின் மருமகனும், தவமணி, தியாகராசா ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தியாகராசா—சுதாமாறன்

பண்ணாகம்.

(54174)

திருமதி
## இளையதம்பி மாணிக்கம்

உடுப்பிட்டி தெற்கு வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், 141/4, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமாகிய திருமதி இளையதம்பி மாணிக்கம் 18–03–98 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும், நாகம்மாவின் அன்புத் தாயாரும், சின்னையாவின் (சின்னராசா) பாசமிகு மாமியும், கனடாவில் வசிக்கின்ற கருணைராஜா, சியாமளா, ஜெயமாலா, பரமா, மஞ்சுளா, கேதீஸ்வரராஜா, ரேணுகா, தியாகலிங்கம், மோகன், இளந்துரை, தேவராஜா, பரஞ்சோதி (விநாயகமூர்த்தி–இந்தியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருமதி நாகரெத்தினம், சரஸ்வதி ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (19-03-98) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
வே. சின்னராஜா (மருமகன்)
த. நாகரெத்தினம் (பெறாமகள்)

(54170)

## வல்லிபுரம் நடராசா

(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நடராசா 18–3–98 இல் காலமானார்.

இவர் முத்துமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தணிகாசலத்தின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நயினாதீவைச் சேர்ந்த வல்லிபுரம்—சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சுந்தரம்பிள்ளை—செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், பரமலிங்கத்தின் (முன்னாள் உபதலைவர், கிராம சபை, கொக்குவில்) சகோதரனும், திருவிளங்கம், அப்பையா, விஜயராமலிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சின்னம்மா, கோகிலாதேவி, கமலம், காலஞ்சென்ற ரங்கநாதன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19–3–98) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் மணியகாரன் லேன், கொக்குவில் கிழக்கு இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ப. வசந்தகுமார்
(பெறாமகன்)
(கிராமசேவையாளர்,
அரியாலை வடமேற்கு.)

(54175)

## சடலம்

வடமராட்சி மந்திகைப் பகுதியில் தனியான காணியில் அமைந்திருந்த கொட்டில் ஒன்றில் இருந்து நபர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

மேற்படி நபரின் சடலம் இனம் காண்பதற்காக மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட போது மந்திகையைச் சேர்ந்த தளையசிங்கம் தனபாலசிங்கம் (42 வயது) என்பவரது சடலமென அவரது தாயாரினால் அடையாளம் காணப்பட்டது.

இவரது மரணத்தில் தனக்குச் சந்தேகம் இருப்பதாகவும் இவரது தாயார் தெரிவித்ததையடுத்து நெல்லியடிப் பொலீஸார் இவரது மரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(இ-7-173)


**பொஸ்கோ**

25, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

A/L 98
கணக்கீடு
கம்பனி முடிவுக் கணக்கு
திரு. S.D.J. சுதர்ஸன்
ஆரம்பம்:- 22-03-1998
ஞாயிறு 2 மணி.
(54157)

**விக்னா**
கல்வி நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

மாதாந்தப் பரீட்சை II

ஆண்டு 6 — 11 ஆம் வகுப்புகளுக்கான வினா விடைத்தாள்களைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்களுக்கு விசேட கழிவுண்டு.
(54166)

நெல்லியடி
**மஹாத்மா**
வெண் திரையில்
18 – 03 – 98 முதல்
M. G. R. - லதா
நடித்த
நாளை நமதே
காட்சிகள்: 10-30, 2-30
( பழைய நேரம் )
(சி/2756)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று,
விஜய் - சிவாஜி நடித்த
ஒன்ஸ்மோர்
நாளை
M. G. R. நடித்த
மாட்டுக்காரவேலன்
ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
சனி முதல்
மோகன் - பூர்ணிமா
நடித்த
விதி
நேரம்:- 10-30, 2-30
(54075)

யாழ்.
**றீகல்** வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
இன்று முதல்
சுப்பஸ்ரார் ரஜனி
நடித்த
முத்து
அடுத்த வெளியீடு!
மேட்டுக்குடி
தினசரி:- 10-30, 2-30
(பழைய நேரம்)
(54177)


## அறிவித்தல்

பருத்தித்துறை வீரவாகு கட்டடத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் கிளை பங்குனி மாதம் 19 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படும். வாடிக்கையாளர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

உதவிப் பொது முகாமையாளர்,
வட வலயம், மக்கள் வங்கி,
யாழ்ப்பாணம்.

(54171)

## மீண்டும் தேவன் வாச் வேக்ஸ்

முன்பு சுன்னாகம் நவீன சந்தைக்கு முன்பாக இயங்கி வந்த தேவன் வாச் வேக்ஸ் ஸ்தாபனம் மீண்டும் பழைய இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**தேவன் வாச் வேக்ஸ்,**
நவீன சந்தை முன்பாக,
சுன்னாகம்.

(54173)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
க. பாமராணி அவர்களின்
அன்புத் தந்தையாரான
**இ. கணேச சர்மா**

அவர்களின் திடீர் மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முதலாம் வருட கலைப்பீட மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்,

(54176)

## இதய அஞ்சலி

V.S.B. குறூப் பங்காளர்
திரு. செ. ஜெகதீசனின் தாயார்
திருமதி
**செல்லத்துரை பாக்கியம்**

அவர்களின் மரணத்தினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரத்தில் பங்கு கொள்வதுடன், எமது இதய அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பங்காளர்கள்,
V.S B. குறூப் & ஜெசீபா ஏஜன்சி.

(சி/3150)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 10 — 10 — 1961



மறைவு: 19 — 03 — 1990

**பஞ்சலிங்கம் பத்மநாதன்**
B.Sc. (Cey.)
(பழைய மாணவன், யூனியன் கல்லூரி
சமூக சேவைகள் உத்தியோகத்தர், துணுக்காய்)

திதி: 20 – 03 – 1998

ஆண்டெட்டுச் சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்
ஈண்டு நம் கவலை என்றுதான் தீருமோ — யாண்டும்
சிரித்த முகத்தில் அந்தச் சிங்காரச் சிரிப்பெங்கே
சரித்திரம் தான் சான்று பகரும்!

பிரிவால் துயருறும்
தாய், சகோதரர்கள்.

நெசவுசாலை வீதி,
மா. விட்டபுரம் கிழக்கு,
தெல்லிப்பளை.

(சி/3148)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று பதவியேற்பு!



புதுடில்லி, மார்ச் 19

இந்தியாவின் புதிய பிரதமராக நியமிக்கப் பட்டுள்ள அடல் பிஹாரி வாஜ்பாய் (வயது 71) இன்று காலை 9.30 மணிக்கு ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்கிறார்.

புதிய அமைச்சரவையில் இடம்பெறவுள்ள 20 அமைச்சர்களும் இன்றைய தினம் பதவியேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய பதவியேற்பு வைபவத்தில் பிரதமருடன் 20இற்கும் மேற்பட்ட அமைச்சர்களும் சத்தியப்பிரமாணஞ் செய்து பதவியேற்பர் என எதிர்பார்க்கப்படுவதாக புதுடில்லி செய்திகள் தெரிவித்தன. ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் வாஜ்பாய் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றதும் புதிய அமைச்சர்களும் பதவியேற்பர்.

பாரதீய ஜனதாக் கட்சியின் சில முன்னணித் தலைவர்களுடன் அ. தி. மு. க பாட்டாளி மக்கள் கட்சி, தமிழக ராஜீவ் காங்கிரஸ், அகாலிதள் சமதாக்கட்சி, சிவசேனை, ஹரியானா விஹாஸ் கட்சி, லோக் சக்தி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அமைச்சரவையில் இடம் பெறுவர் என எதிர்பார்க்கப் படுகிறது.

திரிணமுல் காங்கிரஸ், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் ஆகியன வெளியே இருந்து அரசுக்கு ஆதரவு வழங்கவுள்ளன.

பாரதீய ஜனதாக்கட்சி சார்பில் எல். கே. அத்வானி, முரளி மனோகர் ஜோசி, சிநந்தர் பகத் ஆகியோர் அமைச்சரவையில் இடம் பெறுவர்.

''வாஜ்பாய் பிரதமராகப் பதவியேற்றதும் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதியைக் கோருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணஞ் செய்துவைக்கும் நிகழ்ச்சி இரு நாள்கள் நடைபெறும். இதற்கென தற்காலிக சபாநாயகர் ஒருவர் நியமிக்கப்படுவார். இக்கூட்டத் தொடரின் மூன்றாவது நாளன்று புதிய சபாநாயகர் தெரிவு செய்யப்படுவார்.

பின்னர் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் அடங்கிய கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி உரை நிகழ்த்துவார்.

சபாநாயகர் தெரிவில் இம்முறை போட்டி நிலவுகிறது. சபாநாயகர் பதவிக்குஐக்கிய முன்னணி தனது வேட்பாளரை நிறுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

# தமிழகத்திலிருந்து 9 அமைச்சர்கள்?

சென்னை, மார்ச் 19

மத்திய அரசின் அமைச்சரவையில் தமிழகத்தில் இருந்து மீண்டும் 9 அமைச்சர்கள் இடம்பெறுவர் எனத் தெரியவருகிறது.

ஐக்கிய முன்னணி அரசில் தமிழகத்தைச் சேர்ந்த 9பேர் அமைச்சர்களாக இடம்பெற்றிருந்தனர்.

பாரதீய ஜனதாக்கட்சி சார்பில் தமிழ் நாட்டில் இருந்து இம்முறை தெரிவு செய்யப்பட்ட மூவரில் முன்னாள் மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலமும், ராதாக்கிருஷ்ணனும் அமைச்சர்களாக நியமிக்கப் படுவர் என எதிர்பார்க்கப் படுகிறது.


அ. தி. மு. க. சார்பில் ஜீ. சுவாமிநாதன, ஆர். கே. குமார், எஸ். தம்பித்துரை, டாக்டர் வி. சரோஜா உட்பட ஐவரும் —

பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் அதன் பொதுச்செயலாளர் தலித்அழகுமலையும்—

ராஜீவ் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும் அமைச்சரவையில் இடம்பெறுவர்.

# பி. ஜே. பி. அரசை ஆதரிக்கவில்லை!

## நாயுடு தெரிவிப்பு



ஹைதராபாத், மார்ச் 19

மத்தியில் பாரதீய ஜனதாக்கட்சி அரசு அமைப்பதற்கு ஆதரவு அளிப்பதாக ஜனாதிபதியிடம் தான் தெரிவித்ததாகக் கூறப்படுவதை ஆந்திரா மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு மறுத்துள்ளார்.

மத்திய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக யோசனைகளை ஜனாதிபதி கோரியிருந்த போது காங்கிரஸ் அரசு அமைய ஆதரவு தரப்போவதில்லை என்று மட்டுமே தான் ஜனாதிபதியிடம் கூறியிருந்ததாக நாயுடு தெரிவித்தார்.

மத்தியில் பாரதீய ஜனதாக்கட்சி அரசமைக்க ஆதரவாக தெலுங்கு தேசம் கட்சி நடுநிலைமை வகிப்பதை ஆட்சேபித்து அக்கட்சியை ஐக்கிய முன்னணியில் இருந்து வெளியேற்ற தீர்மானிக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படுவது பற்றி செய்தியாளர்கள் கேட்ட போது —

அக்கேள்விக்குப் பதிலளிக்க நாயுடு மறுத்து விட்டார். ஆனால் ஐக்கிய முன்னணியின் அமைப்பாளராக இன்னமும் தாமே இருப்பதாக அவர் தெரிவித்தார்.

# பெருமளவு வெடிப் பொருள்கள் கோடம்பாக்கம் பகுதியில் மீட்பு!

## சந்தேகத்தில் 6 பேர் கைது!!

சென்னை, மார்ச் 19

சென்னை கோடம்பாக்கம் வட்டாரத்தில் பெருமளவிலான வெடி பொருள்களை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பாக 21 வயது பெண் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அல்உமா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர். இவர்களிடம் இருந்து 45 கிலோ நிறையுடைய பெட்டி வெடிகுண்டுகளும், ஜெலட்டின் குச்சிகளும், வெடிக்க வைக்கும் கருவிகளும், குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கச் செய்யும் கருவிகள், பிஸ்டல்கள், ரகசிய குறிப்புகள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட ஆறு பேரில் நான்கு பேர் கோயம்புத்தூரைச் சேர்ந்தவர்கள். 64 பேரை பலி கொண்ட கோவை தொடர் குண்டுத் தாக்குதலில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் அல்உமா, ஜிகாத் கமிட்டி ஆகிய இரண்டு முஸ்லிம் இயக்கங்களும் தடை செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதற்கிடையில் அல்உமா இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர் ஒருவரையும் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

(ஐ-ரீ)

# பதவியேற்கும் சமயத்தில் வெடிக்க வைக்கத் திட்டம்?

சென்னை, மார்ச் 19

புதிய பிரதமராக அடல் பிஹாரி வாஜ்பாய் இன்று பதவியேற்கவுள்ள சமயத்தில் சென்னையில் பரவலாகக் குண்டுகளை வெடிக்க வைக்கச் சதித்திட்டம் தீட்டப் பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

கோடம்பாக்கத்தில் பெருமளவு வெடி பொருள்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாகக் கைது செய்யப்பட்ட தீவிரவாதச் சந்தேக நபர்களை விசாரணை செய்த போது இத்தகவல் தெரிய வந்தாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த இரு தினங்களாக கோயம்புத்தூரில்பொலீஸார் தீவிர தேடுதல் நடத்தினர்.

(ஐ)

## 2028 ஆம் ஆண்டில்

# இராட்சத எரிகல் பூமியுடன் மோதுமா?

வாஷிங்டன், மார்ச் 18

2028 ஆம் ஆண்டில் பூமி மீது இராட்சத எரிகல் மோதும் அபாயம் உள்ளதாக வானியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். அந்த இராட்சத எரிகல் மோதினால் பூமியில் கடுமையான சேதம் ஏற்படும் என்று தெரிவித்துள்ளனர்.

மோதுவதற்கான வாய்ப்புக் குறைவென்றாலும் அவ்வாறு நிகழ்ந்தால் ஏராளமான உயிர்கள் பலியாவதுடன் கடும் சேதம் இருக்கும் என்றும் கணிக்கப் பட்டுள்ளது.

''நினைத்தாலே எனக்கு நெஞ்சு பதைக்கிறது. நடந்துவிட்டால் தாங்காது பூமி என்கிறார்'' ஆய்வாளர் ஜாக்கில்ஸ்.

சில மைல்கள் விரிந்து அகன்ற அந்த எரிகல் டிசம்பர் 6 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த இராட்சத கல் பூமிக்கும் சந்திரனுக்கும் இடையே கடக்கும. அப்போது பூமிக்கும் இந்த எரிகல்லுக்கும் இடையே உள்ள தூரம் குறைவாக இருப்பதால் அது பூமி மீது மோத வாய்ப்புள்ளது.

நாகரிக மனித காலத்துக்குப் பின் இது போன்ற பெரிய எரிகல் பூமி மீது மோதவில்லை.

இந்த எரிகல் 2028 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 26 ஆம் திகதி பூமி மீது மோத வாய்ப்புள்ளது. இன்னும் சில மாதங்களில் தொலைநோக்கி மூலம் இந்த எரிகல்லை பார்க்க முடியும். மீண்டும் 2000 ஆம் ஆண்டிலும் 2002 ஆம் ஆண்டிலும் மிகத் தெளிவாக இதைப் பார்க்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## உலக அரங்கில்

# தேனிசை செல்லப்பாவின் இசை

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கடந்த சனிக்கிழமை தேனிசைச் செல்லப்பாவின் தமிழீழ ஆதரவு இசைநிகழ்வு நடைபெற்றது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் வரவேற்புரையை சிட்னி ஈழத் தமிழர் கழகத் தலைவர் கலாநிதி சிறீஸ்கந்தராசா நிகழ்த்தினார்.

தொடர்ந்து தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி அவரது சொற்பொழிவுடன் ஆரம்பமானது.

இந்த நிகழ்ச்சியில் தேனிசைச் செல்லப்பாவின் [illegible] இசைக் கலாமணி இளங்கோவனும் பங்கு பற்றினார்.

## பாலியல் அவதூறு:

# கிளின்ரன் மீது புதிய குற்றச்சாட்டு!

வாஷிங்டன், மார்ச் 19

வெள்ளை மாளிகையின் முன்னாள் பெண் பணியாளர் ஒருவர் அதிபர் கிளின்ரன் மீது புதிதாக பாலியல் அவதூறுக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.

கதலின் வில்லி என்ற அந்தப் பெண் சீ. பி. எஸ். தொலைக் காட்சியில் ''60



நிமிட்ங்கள்'' என்ற நிகழ்ச்சிக்கு அளித்த பேட்டியில் பில் கிளின்ரன் தன்மீது புரிந்த அங்க சேஷ்டைகள் குறித்து விவரித்துள்ளார்.

1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் ஓவல் மாளிகைக்கு அருகே கிளின்ரது தன்னை முத்தமிட்டு தனது உறுப்புக்களைத் தொட்டதாக திடுக்கிடும் தகவல் ஒன்றைப் பகிரங்கமாக வெளியிட்டுள்ளார் கதலின்.

தனது கணவரின் நிதிப் பிரச்சினை காரணமாகவே தான் வெள்ளை மாளிகையில் பணிபுரியச் சென்றதாக அப்பேட்டியில் அவர் கூறினார்.

கதலின் வில்லி என்ற இப் பெண்ணின் கணவர் நிதி தொர்டர்பான சட்டப் பிரச்சினை காரணமாக தற்கொலை செய்தார்.

கதலினின் குற்றச்சாட்டு தொடர்பாகக் கருத்து தெரிவித்த வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஜிம் கென்னடி ''திருமதி வில்லியினது குற்றச்சாட்டு சாதாரணமான்து; உண்மையானது அல்ல'' எனத் தெரிவித்தார்.

பவுலா ஜோன்ஸ் என்ற பெண் மீதான பாலியல் அவதூறு தொடர்பான வழக்கு விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த வழக்கில் கருத்துத் தெரிவித்த கிளின்ரன் தான் வில்லியை ஆரத்தழுவியது மட்டுமே ஞாபகம் என்றும் சில வேளை அவரது தலையில் முத்தமிட்டிருக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபரின் பாலியல் விவகாரங்கள் தொடர்பாக பல பெண்கள் தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் தகவல்கள் அவரது அரசியல் எதிர்காலத்தைப் பாதித்துள்ளன.

வெள்ளை மாளிகையின் முன்னாள் பணியாளரான மொனிக்கா லெவின்ஸ்சி என்ற பெண்ணும் கிளின்ரன் மீது பாலியல் அவதூறு குற்றச்சாட்டு சுமத்தியிருப்பது தெரிந்ததே.

(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஊழியர் சேமலாப நிதி குறித்து

# தொழில் நிறுவனங்கள் மீது அதிகாரிகள் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். மாவட்டத்திலுள்ள சில தொழில் நிறுவனங்களில் ஊழியர்களுக்கான சேமலாப நிதிசெலுத்தப்படாமல்இருந்தது தொழில் திணைக்கள அதிகாரிகளினால்'கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், பருத்தித் துறை, கரவெட்டி உட்பட பல இடங்களில் உள்ள தொழில் நிறுவனங்கள் மீது தொழிற் திணைக்கள அதிகாரிகள் அண்மையில்திடீர் பரிசோதனை நடத்தினர்.

இந்தப் பரிசோதனையின் போதே சில நிறுவனங்களில் ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படாதது கண்டு பிடிக்கப்பட்டது.

ஊழியர் சேமலாப நிதி செலுத்தாமல்உள்ள'தொழில் நிறுவனங்கள் மீது தொழில் திணைக்களம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

இது தொடர்பான விவரங்கள் யாழ். உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகத்தினால் திரட்டப்பட்டுவருகிறது.

(ஐ-5)

# பருத்தித்துறைக்கு 10 பஸ் வண்டிகள்

வடமராட்சி, மார்ச் 19

வடபிராந்திய போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போவுக்கு மேலும் பத்து பஸ் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தற் பணிகளுக்கென யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்ட 100 பஸ் வண்டிகளில் 40 பஸ் வண்டிகள் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அண்மையில் வழங்கப்பட்டிருந்தன.

இந்த 40 பஸ் வண்டிகளிலிருந்தே 10 பஸ் வண்டிகள் பருத்தித்துறை டிப்போவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே பருத்தித்துறை டிப்போவுக்கு 10 புதிய பஸ் வண்டிகள் வழங்கப்பட்டிருந்தன. தற்போது இந்த டிப்போவுக்கான பஸ் வண்டிகளின் எண்ணிக்கை 20 ஆகும்.

பத்து பஸ் வண்டிகள் வந்து சேர்ந்ததையடுத்து பருத்தித்துறை டிப்போவினால் நடத்தப்படும் பஸ் சேவைகள் சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-173)


## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கம்
## பொதுக்கூட்டம்

இடம்: மானிப்பாய் மெமோறியல் பாடசாலை
நாள்: 22 - 03 - 98
நேரம்: காலை 9-00 மணி

நிகழ்ச்சி நிரல்

(1) தேவாரம்
(2) தலைமையுரை
(3) இந்த ஆண்டுக்கான உத்தியோகத்தர் நிர்வாக சபைத் தெரிவு
(4) செயலாளர் நன்றியுரை
(5) தேவாரம்

நா. வேதநாயகன்,
பிரதேச செயலர்.
சண்டிலிப்பாய்.

(54159)


## குடும்ப விவரங்கள் சேகரிப்பு

உரும்பிராய் மார்ச் 19

உரும்பிராய் வடக்குப் பிரிவிலுள்ள குடும்பங்களின் பொருளாதார நிலைபற்றிய புள்ளி விவரங்கள் இப்போது சேகரிக்கப்படுகின்றன. வீட்டுக் காணியில் உள்ள மரங்கள், வளர்ப்பு விலங்குகள் பற்றிய விவரங்களும் இவற்றில் அடங்கும்.

கோப்பாய் பிரதேசச் செயலர் பிரிவின் ஏனைய இடங்களில் இந்த விவரங்கள் ஏற்கனவே சேகரிக்கப்பட்டு விட்டபோதிலும், இப்பகுதிக் கிராமசேவை உத்தியோகத்தர் நீண்டநாள்களாகச் சுகயீன விடுமுறையில் சென்றதனால் இங்கு அவை சேகரிக்கப்படாமல் இருந்தன.

புதிய கிராம சேவை உத்தியோகத்தர் த. தங்கராசா இடமாற்றம் பெற்று வந்தவுடன் இப்பணியை ஆரம்பித்துள்ளார்.

(ஐ-154)


## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
## மகோற்சவ கால தற்காலிக கடைகள்

மேற்படி ஆலயத்தின் மகோற்சவ காலத்தின் போது அமைக்கப்படும் தற்காலிக கடைகளுக்கான இடங்கள் 21—03—98 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு ஆலய மடத்தில் வைத்துக் கொடுக்கப்படும். மேற்படி இடங்களுக்கான நில வாடகைகளை உடன் செலுத்தி வியாபாரிகள் இடத்தைப் பெற்றுக் கொள்ளலாம். நிர்வாகத்தினரின் பணிப்புரைகளுக்கேற்பவே கடைகள் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

தர்மகர்த்தா சபை,
மருதடி விநாயகர் ஆலயம்.

(54158)


## மரம் நடுகைக்கு நிதி

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். மாவட்டத்தில் மரம் நடுகைக்கென காணி விவசாய அமைச்சு 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

மரம் நடுகை தொடர்பான மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விவசாய விரிவாக்கல் உதவிப்பணிப்பாளரை யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கேட்டுள்ளார்.

(ஐ-5)


## BUSINESS PROMOTERS (PVT) Ltd.

117 [245], Kasthuriar Road,
Jaffna

கணக்கியல் துறையில் பாண்டித்தியமும் அனுபவமும் பெற்றவர்களால் கீழ்க்கண்ட சேவைகள் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.

★ நாளேடு, பேரேடு, பதிந்து பரீட்சை மீதி எடுத்து முடிவுக் கணக்குகள் தயாரித்தல்.
★ விற்பனை வரி ஆவணங்கள் தயாரித்தல்.
★ ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆவணங்கள் தயாரித்தல்,
★ உள்ளகக் கணக்காய்வு (Internal Audit)

— இயக்குநர்

(54164)


## அமைதி வேண்டி விசேட பூசை

கொழும்புத்துறை, மார்ச் 19

தொல்புரம் கிழக்கு திருவடிநிலை அருள்மிகு ஸ்ரீ பிள்ளையார் கோயிலில்பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை 5-30 மணிதொடக்கம் 6-30 மணிவரை மக்கள் மன நிம்மதியுடன் வாழவும், நாடு நலம் பெறவும் இறை ஆசி வேண்டிப் பஜனையும், கூட்டுப் பிரார்த்தனைகளும் நடைபெற்று வருகின்றன.

(ஐ-30)


## MAGNETISED HEAD ACHE BELT

நாட்பட்ட தலைவலிகள், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்து, தூக்கமின்மை, சித்தப் பிரமை, வலிப்பு நோய்கள் ஆகியவற்றிற்கு இக் காந்தப்பட்டி விசேடமானது.

விலை — 300/-

மங்களபதி வைத்தியசாலை,
41/5, அரச வீதி,
(பண்டாரக்குளம் பிள்ளையார் கோயிலடி)
நல்லூர், யாழ்ப்பணம்.

(54160)



## கண்ணீர் அஞ்சலி

V. S. B குறூப் நிறுவனப் பங்காளர்
திரு. செ. ஜெகதீசன்
அவர்களின் அன்புத்தாயார்
திருமதி
**செல்லத்துரை பாக்கியம்**

அவர்களின் மரணத்தினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஊழியர்கள்,
V. S. B குறூப் & ஜெசீபா ஏஜென்சி

(சி-3149)



## வாழ்த்துகின்றோம்

உறுதி கொண்ட நெஞ்சினாய் வா! வா!

யாழ்ப்பாண சித்த மருத்துவத்துறை ஸ்தாபகரும்,
சித்த மருத்துவத்துறைக்கென தன்னையே அர்ப்பணித்து வருபவருமான

**பேராசிரியர் சு. பவானி**

அவர்கள் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்ச்சி அடைவதுடன் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கம்

(54154)



## BOSCO

25, Racca Road, Jaffna

கணக்கீடு

**A/L 98 DAY**

முகாமை கணக்கீடு
[காசுபாதீடு]

திரு. S. D. J. சுதர்ஷன்

ஆரம்பம்: 22 . 03 . 98



## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

வையகம்: 03 — 04 — 1934



மண்ணகம்: 17 — 02 — 1998

அமரர்
**இராமன் நல்லையா**
(குமாரசாமி)
(அந்தியேட்டிக் கிரியை 1998-03-19)

எமது அன்புத் தந்தை சிவபதமெய்தியமை அறிந்து இல்லத்திற்கு வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கடித மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளிலும் கலந்து மற்றும் சகல உதவி புரிந்தவர்களுமான உற்றார், உறவினர், நண்பர்கள், சக ஊழியர்கள், மதுவரித் திணைக்கள ஊழியர்களுக்கும், வன்னி தொடர்புகளை மேற்கொண்டு உதவி புரிந்த கெயர் நிறுவனத்திற்கும், சி. புஸ்பராசா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் 19—03—93 இன்று காலை 7.00 மணியளவில் எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இ. ரவிச்செல்வம் (மகன்)
(வடமராட்சி ப. நெ. வ. அ. கூ. சங்களின் கொத்தணியின் பாதுகாப்புப் பகுதி உத்தியோகத்தர்)

சாத்தாவத்தை,
கரணவாய் மேற்கு,

(54165)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செய்திக் கொத்து

### திருத்தப்படாத வீதி

சுன்னாகம், மார்ச் 19

புத்தூரிலிருந்து வண்ணாத்திப் பாலமூடாகக் கனகம் புளியடி வரை செல்லும் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்கு கடுஞ் சேதமடைந்துள்ளது.

சில இடங்களில் பாரிய பள்ளங்கள் காணப்படுகின்றன. இதனால் அவ்வழியால் வாகனங்களில் செல்லும் பயணிகள் பெரிதும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

வீதியின் இரு மருங்கும் நீண்ட காலமாக கற்கள் போடப்பட்டிருப்பினும், இதுவரை திருத்த வேலைகள் இடம்பெறவில்லையென அவ்வழியால் பயணம் செய்வோர் அதிருப்தி தெரிவித்தனர். (இ-27)

### கிரனேட் வெடிப்பு

சுன்னாகம், மார்ச் 19

கிரனேட் ஒன்று தற்செயலாக வெடித்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்ததுடன் அவரது ஒரு காலும் முழங்காலுக்குக் கீழே துண்டிக்கப்பட்டதாக அறியப்பட்டுள்ளது.

சுன்னாகம் ஸ்ரேசன் வீதி மின் உற்பத்தி நிலையத்துக்குச் சமீபமாக இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-27)

### கள் விற்பனை தடுக்கப்பட்டது

சுன்னாகம், மார்ச் 19

போயா தினமான கடந்த வியாழனன்று சுன்னாகப் பகுதியில் கள் விற்பனை செய்த தவறணை ஒன்றுக்குள் நுழைந்த படையினர், கள் விற்பனையைத் தடுத்து நிறுத்தினர். (ஐ-27)

### நெல் கொள்வனவு

சண்டிலிப்பாய், மார்ச் 19

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளின் நலன்கருதி விவசாயிகளிடமிருந்து நெல்லையும், வெங்காயத்தையும் கொள்வனவு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-135)

### நட்டஈடு வழங்கக் கோரிக்கை

நெடுந்தீவு, மார்ச் 19

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த ஆலயங்களுக்கு நட்டஈடு பெற்றுத் தருமாறு குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆலயங்களின் அறங்காவல் சபையினர் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையிடம் கோரியுள்ளனர்.

ஆலயங்களின் அறங்காவலர்கள், பரிபாலன சபை உறுப்பினர்கள் கலந்து கொண்ட கருத்தரங்கில் வைத்து நட்டஈடு கோரும் விண்ணப்பங்களை அவர்கள் பேரவையின் பிரதிநிதிகளிடம் வழங்கினார்கள். அன்றைய தினம் சுமார் 65 விண்ணப்பங்கள் வரை பேரவையிடம் வழங்கப்பட்டன. (இ-111)

### ஆசிரியர் பற்றாக்குறை

செம்பியன்பற்று, மார்ச் 19

மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் உள்ள அம்பன் அமெரிக்கன் மிசன் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர் பாதிப்புறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாடசாலையில் ஆரம்பக் கல்விக்கு 1 ஆசிரியர் மட்டுமே உள்ளதாகவும்— இதைவிட மேல்வகுப்புக்களிற்கு சமூகக்கல்விக்கும், ஆங்கில பாடத்திற்கும் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் எனவும்— தெரிவிக்கப்படுகின்றது. (இ-36-9)

### வரி செலுத்துமாறு கோரிக்கை

தென்மராட்சி, மார்ச். 19

தென்மராட்சி பிரதேச வாகனங்களுக்கான வரி பிரதேச செயலகத்தில் அறவிடப்பட்டு வருகிறது.

வாகனச் சொந்தக்காரர்கள் தமதுதேசிய அடையாள அட்டை, காப்புறுதிப் பத்திரம், கடைசியாகச் செலுத்தப்பட்ட வரிச்சிட்டை ஆகியவற்றைச் சமர்ப்பித்து 1998 ஆம் ஆண்டு வரையான வரியைமார்ச் 31 ஆம்திகதிக்கு முன்னர் செலுத்துமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ-117)

### நெல் விற்பனை

கொழும்புத்துறை, மார்ச் 19

தொல்புரம், மூளாய், சுழிபுரம், சங்கானை ஆகிய பகுதிகளில் ஒரு மூடை நெல் தற்போது ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பச்சைப்பெருமாள், கறுத்தப் பெருமாள் நெல் மூடையே இந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. (இ-30-9)

### திருடர்கள் கைவரிசை

செம்பியன்பற்று, மார்ச் 19

பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருந்த வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் சுமார் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றனர்.

கந்தர்மடம் இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கையிலுள்ள வீடு ஒன்றில் கடந்த சனிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-36-9)

### மலை அடிவாரத்தில் தீப்பற்றியது

கொழும்பு, மார்ச் 19

பேதுருதாலகால மலை அடிவாரத்தில் சமீபத்தில் பரவிய தீ நுவரெலிய மாநகர சபை அதிகாரிகளின் முயற்சியினால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

சுமார் 10 ஏக்கர் காட்டு நிலம் இந்தத் தீயினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. தீக்கான காரணத்தை அறிய நுவரெலியா பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-9)

### உதவிப்பணிப்பாளர் நியமனம்

அச்சுவேலி, மார்ச் 19

கோப்பாய்ப் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பொன். இராமநாதன் யாழ். மாவட்ட கால்நடை வைத்திய உதவிப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-11)

### வீதியின் ஒரு பகுதி திருத்தப்படவில்லை

நெல்லியடி, மார்ச் 19

மாலு சந்தியிலிருந்து வதிரிக்கு செல்லும் பாதை செப்பனிடப்பட்டிருந்த போதும் இப் பகுதியில் சுமார் நூறு மீற்றர் தூரம் வரையிலான பகுதி செப்பனிடப்படவில்லை. இவ் வீதியிலேயே பருத்தித்துறை நீதிமன்றம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-109)

### சிரமதானம்

நெல்லியடி மார்ச் 19

புலோலி வடக்கு இளைஞர் கழக ஆதரவில், மந்திகை மருத்துவமனையில் 6ஆம், 7ஆம் வார்ட் பகுதி சிரமதான மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இச் சிரமதான வைபவத்தில் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை உட்பட நூற்றுக்கணக்கானோர்கலந்து கொண்டனர். (இ-109)

# தற்காலிக, அமைய ஊழியர்கள் ஒரு லட்சம் பேர் வேலை இழப்பர்

## நிதி நெருக்கடியால் ஆபத்தாம்

கொழும்பு, மார்ச் 19

அரசின் பல்வேறு நிறுவனங்களிலும் பணியாற்றும் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்கள் சுமார் ஒரு லட்சம் பேர் வரையில் விரைவில் வேலையை இழப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தற்காலிக அல்லது அமைய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கோ அல்லது அவர்களைத்தொடர்ந்து சேவையில் வைத்திருக்கவோ நிதி போதுமானதாக இல்லாத காரணத்தினாலேயே இந்நிலை உருவாகியுள்ளது என 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவ்வாறு வேலையை இழந்து வீடு செல்ல நேரிடும் ஊழியர்களுக்கு எவ்வகையில் நஷ்டஈட்டை வழங்கலாம் என்பது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது-

தொடர்ந்து ஒருவருட சேவையை முடித்த ஊழியர்களை நிரந்தரமாக்குவது என கொள்கையளவில் அரசாங்கம் ஏற்றுக் கொண்ட போதிலும் நிதிப் பற்றாக்குறை காரணமாக இந்த ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாது நீண்ட காலம் சேவை புரிந்துள்ளனர்.

உருவாகியுள்ள இந்த நிலைக்கு எடுக்கப்பட வேண்டிய நல்ல சுலபமான வழி அந்த ஊழியர்களை வேலையில் இருந்து நீக்குவதே என உலக வங்கி ஆலோசகர்கள் அரசுக்குப் பணிப்புரை விடுத்துள்ளனர்.

இவ்வாறு 'லக்பிம' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-10)

## விண்ணப்பப் படிவம் பெறலாம்

அச்சுவேலி, மார்ச் 19

விலங்கு பரிபாலன டிப்ளோமா பயிற்சி நெறிக்கு பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டது தெரிந்ததே.

இம்மாதம் 24 ஆம் திகதி விண்ணப்பிப்பதற்கான இறுதித்தினம் என அறிவிககப்பட்டுள்ளது. ஜி. சீ. ஈ உயர்தர பரீட்சையில் உயிரியல் உட்பட 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம் என்றும்—

யாழ். மாவட்ட விண்ணப்பதாரர்கள் பிரதேச கால்நடை வைத்தியர் அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-11)

## அறநெறிப் பாடசாலை

அச்சுவேலி, மார்ச் 19

இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் அறநெறிப் பாடசாலை இடைக்காடு கொட்டடி வைரவர் ஆலய மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் இந்த அறநெறிப் பாடசாலையின் அதிபராக பு. கதிர்காமத்தம்பி நியமிக்கப்பட்டுள்ளார்.

## முதலுதவி நிலையம்

அச்சுவேலி, மார்ச் 19

அச்சுவேலி சென். ஜோன்ஸ் அம்புலன்ஸின் வெண்புறா வெளிவாரிப் பிரிவு முதலுதவி நிலையத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை பிரிவு அத்தியட்சகர் கு. கேதீசன் தலைமையில் நடைபெறும்.

கோப்பாய்ப் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு முதலுதவி நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார். (ஐ-11)

## தொழில்நுட்ப கற்கை நெறிக்கான பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்களுக்குமான சில கற்கை நெறிகளுக்கு பரீட்சைகள் நடைபெற உள்ளன.

உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் தற்போது கல்வி பயின்று வரும் எச். என். டி. சி. இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

தொழில் நுட்பக் கல்லூரியில் இருந்து உயர் தொழில் நுட்ப நிறுவனம் தனித்துச் செயற்பட ஆரம்பமாவதற்கு முன்னர் தொழில் நுட்பக் கல்லூரியில் கல்விகற்ற என். டி. பி. எஸ்., என். டி. பி. எவ்., என். டி. ஈ. ஆகிய கற்கை நெறிகளில் கல்வி பயின்ற இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதியும் —

எச். என். டி. சி இரண்டாம், மூன்றாம், நான்காம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியும் ஆரம்பமாக உள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இப் பரீட்சைகள் இந்தத் தடவை மட்டுமே பரீட்சை திணைக்களத்தால் நடாத்தப்படும் எனவும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சை நேர அட்டவணைகளை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பார்வையிடலாம் என உயர் தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் ரீ. இராஜரட்ணம் தெரிவித்துள்ளார். (ஐ-9)

## அச்சுவேலி ம. வியில் பெரும் இடநெருக்கடி

### மாணவர்கள் பாதிப்பு

அச்சுவேலி, மார்ச் 19

அச்சுவேலி மகா வித்தியாலய மாணவர்கள் இட நெருக்கடியால் அவதிப்படுகின்றனர். சாதாரண இடைவேளை நேரத்தில்கூட உரிய முறையில் நடமாட முடியாமல் நெருக்கடி நிலையில் தமது கல்விச் செயற்பாடுகளைத் தொடருகின்றனர்.

கடந்த காலங்களில் பாடசாலைக்கு அருகில் இருந்த காணியில் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் பயிற்சிளைப் பெற்றுவந்த மாணவர்கள் தற்பொழுது அந்த நிலத்தைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதால் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

மாணவர்கள் சமகாலத்தில் அனுபவிக்கும், சிரமங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் வலயக் கல்விப் பணிப்பாளரையும், கோட்டக் கல்வி அதிகாரியையும் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர். (ஐ-11)

## கடந்த ஆண்டு 31பேர் தொழுநோயால் பாதிப்பு

திருநெல்வேலி, மார்ச் 19

கடந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட தொழுநோய் பரிசோதனைகளின் போது 31 பேர் தொழு நோயாளிகளாக இனங் காணப்பட்டனர்.

இவர்களில் 18 பேர் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிப்பவர்கள்.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் ஏழு மத்திய நிலையங்களில் தொழு நோயாளருக்கான மருந்துகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் தொழு நோயாளருக்கான சிகிச்சை கிளினிக் நடத்தப்பட்டு வருகின்றது.

மாதத்தில் இரண்டாவதாக வரும் திங்கட்கிழமைகளில் தொல்புரம் அரசினர் மத்திய மருந்துச்சாலையிலும் —

மாதத்தில் மூன்றாவதாக வரும் திங்கட்கிழமைகளில் வல்வெட்டித்துறை அரசினர் வைத்திய சாலையிலும்—

மாதத்தில் நான்காவதாக வரும் திங்கட்கிழமைகளில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும் —

மாதத்தில் இரண்டாவதாக வரும் சனிக்கிழமைகளில் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையிலும் மாதத்தில் முதலாவதாக வரும சனிக்கிழமைகளில் புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்திலும் —

மாதத்தில் நான்காவதாக வரும் செவ்வாய்க்கிழமைகளில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும்—

தொழுநோயாளர்கள் என்று இனங் காணப்படுபவர்களுக்கான மருந்துகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட தொழுநோய்த் தடுப்பு பொது சுகாதார பரிசோதகர் எம். சிவபாலன் இத்தகவலைத் தெரிவித்தார். (இ-138)

## தே. எண்ணெய் விலை அதிகரிப்பு

சுதுமலை, மார்ச் 19

குடாநாட்டில் தேங்காய் எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது. ஒரு லீற்றர் 60 ரூபாவாக விற்கப்பட்ட எண்ணெய் 75 ரூபாவாக வர்த்தக நிலையங்களில் விற்கப்பட்டு வருகின்றன. (இ-139)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வெளிவந்துவிட்டது

வீரபத்திர சகஸ்ர நாமவாளி அடங்கிய வீரபத்திர யாக மண்டப பூசை (கிரந்த லிபி) நூல் வெளிவந்து விட்டது. கிடைக்குமிடம்: த. வீரபத்திரசிவக் குருக்கள், வீரபத்திரர் ஆலயம், கெருடாவில், சாவகச்சேரி. (54150)

### திருத்த வேண்டுமா?

ரி. வி. றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும், ரி. வி. அன்ரனாக்கள் பொருத்திக் கொள்ளவும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம், (B. Sc. Ceylon Dip In Electronic Engineering London), 284, ஸ்ரான்லிவீதி, (நாக விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி/3069]

### யாழ்ப்பாணம்

15-03-98 வீரகேசரியில் பிரசுரமான ''வீடு'' யாழ்ப்பாண இடம்பெயர்வை வைத்து அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய சிறுகதை. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் நூல், அதன் வரலாறு ரூபா 50. (54135)

# ஆசிரியர் தொடர்கல்வி பாட நெறி சீராக நடைபெற வசதி செய்யவில்லை

## பயிற்சியாளர்கள் கவலை

யாழ்ப்பாணம். மார்ச் 19

யாழ். மாவட்டத்திற்கு ஆசிரியர் தொடர்கல்விப் பயிற்சி நெறிக்கான மொடியூல்கள் வந்து சேராமை, மற்றும் தொடர்கல்வி போதனாசிரியர்கள் கடமையைச் செய்வதற்குப் பாடசாலைக் கடமையில் இருந்து விடுவித்து அனுமதி வழங்கப்படாமை ஆகிய காரணங்களினால்400-க்கும் மேற்பட்ட தொடர்கல்விப் பயிற்சி ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களில் 5 வருட சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு மீள் பயிற்சி அடிப்படையில் தொலைக்கல்வி முறையில் தொடர்கல்விப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

ஒரு வருடப்பயிற்சி நெறி தென்னிலங்கையில் கடந்த நவம்பர் மாதம் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

யாழ். மாவட்டத்தின் இரண்டு நிலையங்களில்— யாழ்ப்பாணம் நிலையத்தில் 300-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், கரவெட்டி நிலையத்தில் 100-க்கு மேற்பட்ட ஆசிரியர்களுமாக— 400-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பயிற்சியைத் தொடர்கின்றனர்.

யாழ். மாவட்டத்திற்கு ஆசிரியர் தொடர்கல்விப் பாடநெறிக்கான மொடியூல்கள் இதுவரை வந்து சேரவில்லை.

தொடர்கல்விப் பாடநெறிக்கான போதனாசிரியர்கள் பாடசாலைக் கடமையில் இருந்து விடுவிக்கப்பட்டு போதனாசிரியர் கடமைக்கு இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

தொடர்கல்விப் பாடநெறியில் விடுமுறை நாள்களில் செயல் அமர்வுகளும், போதனாசிரியர்களினால் பாடசாலை மட்டத்திலான வழிகாட்டல் சேவையும் வழங்கப்பட வேண்டும்.

போதனாசிரியர்கள் உரிய முறையில் தொடர்கல்வி கடமைக்கு அனுமதிக்கப்படாமல் இருந்து வருவதால் பாடசாலை வழிகாட்டல் சேவை நடைபெறவில்லை என அறியப்படுகின்றது.

போதனாசிரியர்கள் தனிப்பட்ட முறையில் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்த மொடியூல்களை பயன்படுத்தி செயல் அமர்வுகளை நிறைவு செய்வதாகவும் கூறப்படுகின்றது.

மே மாதம் இறுதிப் பகுதியில் அரையாண்டுக்குரிய பரீட்சை நடைபெற விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் ஆசிரியர் தொடர்கல்விப் பாடநெறிச் செயற்பாடுகள் முழுமையாக நடைபெறாத நிலையில் எப்படிப் பரீட்சைக்குத் தோற்றுவது என யாழ். மாவட்ட தொடர்கல்விப் பயிற்சி ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ-11)

## விவாதம் ஒத்திவைப்பு

முன்னாள் அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயபால மென்டிஸின் குடியுரிமைகளை நீக்குதல் தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் நடைபெற்றது.

இந்த விவாதத்தில் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் பட்டி வீரக்கோன், அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க, திட்ட அமுலாக்கல் பிரதியமைச்சர் சமரவீர வீரவன்னி, பிரதி அமைச்சர் அத்தாவுட செனிவிரட்ண, கல்வி உயர் கல்வி பிரதி அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விஜயபால மென்டிஸ்ஸிற்கு எதிரான பிரேரணையை பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்தார். இந்தப் பிரேரணை மீதான விவாதம் ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் மீண்டும் சபைக்கு வரும் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (உ-9)

## புராண படன போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தும் புராண படனப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென சைவப் புலவர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார். (இ-7)

## குரு பூசையை முன்னிட்டு போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 19

புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை குரு பூசை தினத்தை முன்னிட்டு புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் வடமராட்சி பாடசாலை மாணவர்களுக்கு இடையே போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

மனனம், பண்ணிசை, பேச்சு, பொது அறிவு, மாலைகட்டுதல், கோலம் போடுதல் ஆகிய போட்டிகள் பிரிவு ரீதியாக நடத்தப்படவுள்ளன.

போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் மார்ச் 27 ஆகும். மேலதிக விவரங்களை சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற முடியுமென சனசமூக நிலையத் தலைவர் தெரிவித்துள்ளார். (இ-4)

## அனுராவை நியமிக்க கோரிக்கை

கொழும்பு, மார்ச் 19

மேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராக அனுரா பண்டாரநாயகாவை நியமிக்கும்படி கம்பஹா மாவட்ட ஐ.தே.க செயற்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளதுடன் கட்சித் தலைமைப் பீடத்திற்கு வேண்டுகோளையும் விடுத்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே ஏகமனதாக இந்த முடிவு எடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)


## தேவை

யாழ். நகரில் மொத்த பல சரக்கு விற்பனை நிலையத்திற்கு முன் அனுபவமுள்ள ஆண் கணக்காளர், பில் கிளார்க், விற்பனையாளர்கள் தேவை. 20ஆம், 21ஆம் திகதிகளில் காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை கீழ்க்குறிப்பிட்டிருக்கும் விலாசத்தில் நேரில் சமுகந் தரவும்.

334, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(54121)

மீண்டும்

## நேரு போட்டோ

துரிதகெதியில் சிறந்த சேவை
உங்கள் இல்லத்தில்

திருமணமா, நீராட்டு விழாவா, பிறந்தநாட் கொண்டாட்டமா அனைத்தையும் அழகிய வர்ணப் படம்பிடிப்பதற்கும், அரச நிறுவன ஊழியர்கள், வர்த்தக நிறுவன ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் தங்கள் அடையாள அட்டையை கலர், கறுப்பு, வெள்ளைப் புகைப்படங்களுடன் லெமினேற்றிங் செய்வதற்கும்:

நேரு போட்டோ

குளப்பிட்டி, ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(54153)


## 3 ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 11 — 1927

மறைவு: 23 — 03 — 1995

### அமரர் க. சின்னத்துரை

(முன்னாள் கீரிமலைக் கேணி பாதுகாவலர்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
உரும்பிராய் கிழக்கு, மனைவி, மக்கள்,
உரும்பிராய். மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## புகையிலை, வெங்காயம் கப்பலில்ஏற்றப்படுகின்றன

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கி முடித்துள்ள 'மெக்ஸ் ஹண்டி' கப்பலில் வெங்காயம், புகையிலை தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவதற்காக ஏற்றப்பட்டு வருகின்றன.

நுகர்வோர் கூட்டுறவு சமாசத்தினாலும், தனியார் வர்த்தகர்களினாலும் எடுத்துவரப்பட்டுள்ள புகையிலை, வெங்காயம் என்பன பருத்தித்துறை சிவன் கோயிலடியில் வைத்து இராணுவத்தினரால் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் நேராக துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு கப்பலில் ஏற்றப்படுகின்றன.

இரண்டொரு தினங்களில் இக்கப்பல் கொழும்பு நோக்கி புறப்படும்.

இதே நேரம் தனியார் வர்த்தகர்களுக்கென ''சஜிந்த'' என்ற கப்பலில் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட அத்தியாவசியப் பொருள்கள் தற்போது இறக்கப்பட்டு வருகின்றன. (ஐ-173)

## குத்தரிசி கையிருப்பு

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் குத்தரிசி தாராளமாக கையிருப்பில் இருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது ஒரு கிலோ குத்தரிசி சங்க கிளைகளில் 23 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்படுகிறது. (ஐ-17)

## தபால் ஊழியர் போராட்டம் தொடர்ந்து நீடிப்பு

கொழும்பு, மார்ச் 19

தபால், தொலைத் தொடர்பு ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையை நிறுத்த மேற் கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் இன்னமும் முடிவடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எட்டு தபால், தொலைத் தொடர்பு தொழிற்சங்கங்கள் மேற்கொண்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வர தபால், தொலைத்தொடர்பு அமைச்சுச் செயலாளர் கே. ஸி. லோகேஸ்வரன் அந்த தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினமும் பேச்சுக்கள் நடத்தினார்.

நேற்றைய தினமும் பேச்சுக்கள் தொடர இருந்தன.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக லட்சக்கணக்கில் தபால்கள் கொழும்பு பிரதம தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)


உ

## புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் ஈசுர வருடம் பங்குனி மாதம் 5ஆம் திகதி (19-03-1998) வியாழக்கிழமை காலை 9-48 மணி முதல் 11-27 மணி வரைவரும் சுபவேளையில்,

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்

### லிங்கன் ஸ்ரோர்ஸ்

LINKAN STORES
(DEPARTMENTAL STORES)

என்னும் ஸ்தாபனத்தைத் திறக்க நிச்சயித்திருப்பதால், அத்தருணம் எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
நிர்வாகத்தினர்

168, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (54148)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உள்ளிருக்கும் எமன்!

வன்னிப் பிரதேசத்தில் இருந்து திரும்பிய சிறுவன் ஒருவன் தனது வீட்டுக்குச் சென்ற போது அங்கிருந்த குண்டு வெடித்து இறந்துள்ளான். சங்கானையில் நடைபெற்ற இச் சம்பவத்தில் வீட்டுக் கதவைத் திறந்த வேளை குண்டு வெடித்திருக்கிறது.

இது போன்று, மக்கள் இதுவரை குடியமராத இன்னும் எத்தனை வீடுகளில் குண்டுகள், மிதிவெடிகள் உள்ளிருக்கும் எமனாக மக்களைக் கொல்லக் காத்திருக்கின்றனவோ தெரியாது!

"சூரியப்பிரகாசம்" இராணுவ நடவடிக்கை நடைபெற்று 26 மாதங்கள் கடந்துவிட்டன. குடாநாட்டு மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியும் இருபது மாதங்களாகிவிட்டன. அவ்வாறிருக்க வீடுகள், வளவுகளில் பதுங்கிக் கிடக்கும் குண்டுகள், மிதிவெடிகள் மக்களுக்கு எமனாக மாறுவது பெரும் கவலைக்குரிய விடயம்.

வடக்கு - கிழக்கு மண்ணில் பல வழிகளாலும், காரணங்களாலும் மரணங்கள் மலிந்துவிட்டன. மனித வாழ்க்கையில் மிக உச்ச மதிப்புள்ள உயிர்கள் என்னென்னவோ விதங்களில் எல்லாம் பலி கொள்ளப்படுகின்றன. சாவு என்பது சர்வசாதாரணம் என்ற நிலையாகிவிட்டது.

மறைத்து வைக்கப்பட்ட குண்டுகளும், புதைத்து வைக்கப்பட்ட மிதி வெடிகளும்தொடர்ந்தும் உயிர்க் கொல்லிகளாக மக்களைச் சாகடிப்பதற்கு, சம்பந்தப்பட்ட பகுதியினரின் அக்கறைக் குறைவே காரணம்.

குடாநாட்டு மக்களில் மிகக் கணிசமான எண்ணிக்கையினர் இன்னும் தமது வீடுகளில் மீளக்குடியமரவில்லை. இந்த வீடுகளை, வசிப்பதற்குப் பாதுகாப்பான இடங்களாக உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்துள்ளது.

ஆகையால் வீடுகள், வளவுகளில் ஒளிந்திருக்கும் மிதி வெடிகளையும் குண்டுகளையும் மீட்டுச் செயல் இழக்க வைக்கும் பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு, முடிவு காணப்பட வேண்டும்.

இதனை ஓர் அவசரப் பணியாக, தொடர் திட்டமாக நிறைவேற்றி வந்திருப்பின் கடந்த இருபது மாதங்களில் மிகப் பெரும் பிரதேசத்தைச் "சுத்தி" செய்திருக்கலாம். சங்கானைச் சம்பவம் போன்ற அவச்சாவுகளைத் தடுத்திருக்கலாம்.

ஆனால். மிதி வெடிகளைக் கண்டு பிடித்துச் செயல் இழக்க வைக்கும்பணியைச் செய்வதற்கு அரசாங்கத்திடம்- அரச படைகளிடம்- போதிய ஆளணியினர் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு ஐ. நா. உதவி கோரப்பட்டுள்ளது.

இந்த லட்சணத்தில் இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் கண்ணிவெடிகளை அகற்ற உதவுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது!

அவ்வாறெனில் குடாநாட்டில் குண்டுகள், மிதிவெடிகளை அகற்றுவதற்குப் போதிய ஆளணியினர் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது ஏன்? தமிழர் சாவுகளை நிறுத்துவதில் அக்கறை இல்லை என்பதால் தானே?

# அடிப்படை வசதிகளைச் செய்யத் தேவையான வளங்கள் அனைத்தும் வற்றிப் போயுள்ளன!

(பகுதி II)

இராணுவ நடவடிக்கை காரணமாக வலி. கிழக்கு பிரதேச சபைக்குரிய ஆதன வரி இடாப்புக்கள் மற்றும் பிரதான பதிவேடுகள் அழிந்து போயுள்ளன. விலை மதிப்பீட்டு திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு சில உப அலுவலகங்களின் ஆதனங்கள் பிரதிகள் செய்யப்பட்டன.

புத்தூர், உரும்பிராய், அச்சுவேலி, நீர்வேலி, கோப்பாய் போன்றவற்றின் ஆதனங்கள் இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்துள்ளமையால் மீள மதிப்பீடு செய்ய வேண்டிய நிலையுள்ளது, பல இடங்களில் மக்கள் மீளக்குடியமராத காரணங்களினால் வரியை அறவிட முடியாதுள்ளதால் வருமானம் கிடைப்பதில்லை.

ஐந்து உப அலுவலகங்களுக்கும், ஆயுர் வேத வைத்திய சாலைக்கும் நிரந்தர கட்டடங்கள் இல்லாமையினால் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியாதுள்ளது. இராணுவ நடவடிக்கையினால் வீதிகள் பல சேதமடைந்த நிலையிலுள்ளன. இந்தப் பிரதேச சபையின் அபிவிருத்திக்கு பல லட்சம்ரூபா உடனடியாக ஒதுக்கப்பட வேண்டும்,

### நல்லூர்ப் பிரதேசசபை

நல்லூர்ப் பிரதேசசபையிலும் ஆளணிப் பற்றாக் குறை நீண்டகாலமாக நிலவி வருகிறது. அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரில் 10 எழுதுவினைஞர்களுக்கு வெற்றிடம் உள்ளது. தலைமைக் காரியாலயம் மூன்று எழுதுவினைஞர்களுடனும், நல்லூர் உப அலுவலகம் பொறுப்பதிகாரி ஒருவருடனும், இரு எழுதுவினைஞர்களுடனுமே நிர்வாகத்தை நடத்த வேண்டியுள்ளது. அலுவலகக் காரியாலயப்பணியாளர் இல்லை.

சந்தைத் தொழிலாளர்கள், வீதித் தொழிலாளர்கள், சுகாதாரத் தொழிலாளர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன, வாகன வசதிகள் இல்லை. சபை நடத்தும் ஆயுர்வேத வைத்திய சாலையில் நோயாளர்

## உரிய மக்கள் சேவை செய்ய நிதியும் செயற்பாடும் அவசியம்

எண்ணிக்கை அதிகரித்து வருகின்றபோதிலும் போதிய மருந்துவகைகள் இல்லாமையினால் திருப்திகரமான சேவையை வழங்க முடியாதுள்ளது. சேதமான கட்டடங்கள் எதுவும் திருத்தப்பவில்லை.

### பச்சிலைப்பள்ளி பிரதேசசபை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையிலும் ஆளணிப் பற்றாக்குறையே பெரிதாகக் காணப்படுகிறது. சட்ட ஒழுங்குகள் சீராக இல்லாமையினால் சோலை வரி, ஏக்கர்வரி, உரிமக் கட்டணங்கள், சந்தை வரிகள் சரிவர அறவிட முடியாத நிலையிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இச் சபையின் எல்லைக்குட்பட்ட வீதிகள், தெருக்கள் நீண்ட காலமாக திருத்தப்படவில்லை. சபையின் பாவனைக்கும் நிர்வாக விடயங்களை கையாள்வதற்கும் ஆயுர்வேத வைத்திய சேவையை மக்களுக்குவழங்குவதற்கும் கட்டட வசதிகள் இல்லை.

சந்தை ஓரளவு இயங்குகின்ற போதிலும் அதில் குறைந்த வருமானமே கிடைக்கின்றது. சபையினால் நடத்தப்படும் நூலக சேவை விரிவு படுத்தப்பட வேண்டும்.

1990 ஆம் ஆண்டுக்கு பின் இன்றுவரையும் இப்பகுதிக்கு மின்சார விநியோகம் நடைபெறவில்லை. யாழ்ப்பாணத்தில் ஏனைய பகுதிகளில் வழங்கப்படும் மின்சார சேவை இப்பகுதிக்கு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

### பருத்தித்துறை பிரதேசசபை

கெருடாவில் தொடக்கம் சுண்டிக்குளம் வரையான நீண்ட தூரப்பகுதிகளை எல்லையாகக் கொண்டு மூன்று உப அலுவலகங்களை உள்ளடக்கியது பருத்தித்துறை பிரதேசசபை. வல்லிபுரக்கோயில் தொடக்கம் மருதங்கேணி வரை இராணுவக் கட்டுப்பாடு அற்ற பிரதேசமாக இருக்கிறது. உடுத்துறையிலிருந்து சுண்டிக்குளம் வரையிலான பகுதி மக்கள் குடியிருப்புக்கு அனுமதிக்கப்படாத பிரதேசமாக உள்ளது இச்சபையிலும் ஆளணிப் பற்றாக் குறை பெருமளவில் நிலவுகிறது. இப்பகுதியிலுள்ள வீதிகள், தெருக்களும் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும். பருத்தித்துறை நகர சபையிலும் பல வெற்

### குடாநாட்டு உள்ளூராட்சி சபைகள்

றிடங்கள் இருக்கின்றன. சபைக்கு புதிதாகத் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும்.

### வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றக் கட்டடம் தொடர்ந்து இடம்பெற்ற குண்டு வீச்சு, விமானத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டுள்ளது. இக் கட்டடம் திருத்தப்பட வேண்டும்.

திருத்த வேலைக்கு 90 லட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அலுவலகத்தளபாடங்கள், இயந்திர உபகரணங்கள் பற்றாக் குறையாக உள்ளன. அலுவலகத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஆளணி 69 ஆகும். எனினும் தற்போது 34 பேரே கடமையாற்றுகிறார்கள்.

மூன்று சதுர மைல் சுற்றளவைக் கொண்ட இந்த நகரசபை எல்லைகளில் உள்ள வீதிகள், தெருக்குள் எதுவும் 1988 ஆம் ஆண்டிற்குப் பின்னர் புனரமைப்புச் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வல்வெட்டித்துறை நகர சபை பகுதிக்குள் தற்போது பாவனையிலுள்ள வாளி மலசல கூடங்கள் யாவும் நீரடைப்பு மலசல கூடங்களாக மாற்றியமைக்கப்பட

### கேசரி

வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. இதனால் நூறு குடும்பங்கள் வரை பயனடையும் என்று எதிர்பார்க்கலாம்.

உழவியந்திரம் — 01, குப்பை அகற்றும் வண்டி — 04, கான் கழிவு அகற்றும் வண்டி — 04 என்பன நகர சபையில் பாவனைக்கென உடனடியாகத் தேவைப்படுகின்றன.

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை

வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்குரிய தளபாடங்கள், உபகரணங்கள், புத்தகங்கள், மருந்துவகைகள் "சூரியப்பிரகாசம்" இராணுவ நடவடிக்கைக்கு பின்னர் காணாமற் போய்விட்டன. அத்துடன் இதன் கட்டடங்களுக்கும் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

வீதிகளும், தெருக்களும் மக்கள் பாவனைக்கு உகந்த முறையில் உடனடியாக திருத்தியமைக்கப்பட வேண்டும்.

இழப்புக்களை ஈடுசெய்வதற்கோ சேதங்களை திருத்தம் செய்வதற்கோ மத்திய அரசிடமிருந்தோ, உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்தோ எதுவித நிதியும் இதுவரை கிடைக்கவில்லை. அத்துடன் சபையிலுள்ள பல வெற்றிடங்களும் நிரப்பப்படாமல் உள்ளன.

(வளரும்)

## தவக்கால சிந்தனை

(23ஆம் நாள்)

அடிமைத்தனத்தில் இருந்து மீட்கப்பட்ட இஸ்ராயேலரோடு இறைவன் உடன்படிக்கை செய்து கொள்கிறார். "நமக்கு முன்பாக வேறு தேவர்களை நீ கொண்டிராதிருப்பாயாக" (யாத். 20:3).

இஸ்ராயேலர் விடுதலை அளித்த இறைவனை ஒதுக்கிவிட்டு, வெட்டிச் சிலைகளுக்கு தூபமிட்டனர் (யாத். 32:7-8).

இஸ்ராயேலரை விட நாம் ஒன்றும் மேலானவர்கள் அல்லர். திருமுழுக்கின் மூலம் கிறிஸ்தவர்களாக்கப்பட்ட நாம் கிறிஸ்தவ விழுமியங்களான அன்பு, நீதி, உண்மை, சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றைக் கடைப்பிடித்து வாழ்கின்றோமா?...

இயேசுவை நம் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளாது கண்டதேகாட்சி, கொண்டதே கோலம் என்ற வாழ்வா? நமக்காகச் செபிப்பதைவிடப் பிறருக்காகச் செபிக்கும் போது நம் செபங்கள் எளிதில் இறைவனால் கேட்கப்படுகின்றன என்பதை உணர்வோம்.

உலகில் பட்டினியால் வாடுவோருக்காகவும், அநீதிகுறைந்து நீதி, சமாதானம் வளரவும், நோய் நொடிகளால் துயருறுவோர் நற்சுகம் பெறவும் நாமும் வேண்டுவோம் — பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்.

சூ. மரிய[illegible]

## சாயி சிந்தனை

மானிடனுக்கு அறிவாற்றல்கள், பகுத்தறிவு முதலானவைகள் இருந்த போதிலும் கூட அவன் தன் சுய வடிவத்தைக் குறிப்பறிந்து கொள்ள முடியாதவனாக இருக்கின்றான் என்றால் இதற்கு காரணம் என்ன? பல பிறவிகளின் பாவ புண்ணியங்களின் பலன்களே இதற்குக் காரணம்.

நற்கருமங்களினால்தான் மானிட உடல் ஏற்படுகின்றது. ஆனால் கனவு, பொய், விபசாரம் முதலான தீய கர்மங்களினால் மானிடனிடம் மலம் (பாவம்) - விக்ஷேபம், ஆவரணம் என்பவைகள் சேர்கின்றன. வயிற்றிலுள்ள மலத்தைப் போன்றே மனத்தைப் பீடித்த மலத்தையும் (மாசையும்) கூட் அகற்றிக் கொள்வதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

இந்த மலம் பல பிறவிகளில் செய்த தீய கர்மங்களின் பயன் ஆகும். இந்தத் தீய கர்மங்களின் பயனே மானிடன் தனது சுய வடிவத்தைத் தெரிந்து கொள்ள முடியாத நிலைக்குக் கொண்டு செல்கிறது.

நண்பர்கள் இருவர் போகும் வழியில் ஒரு வயிரக் கல் மூடையைக் கண்டனர். வயிரத்தைக்கண்டபோது ஒருவனுக்குத் தீய பாவனை பிறந்தது. மனத்தினில் பற்றிக் கொண்டிருக்கும் மலத்தின் வலிமை அது! சோற்றிலே நஞ்சு கலந்து மற்றவனுக்குக் கொடுத்தான். அவனோ சாப்பிட முதல் கத்தியால் இவன் கழுத்தை வெட்டினான்.

இவரிடத்திலும் கிடைத்த பொருளைத் தக்க வைத்துக் கொள்ளும் சக்தி, சாமர்த்தியங்களை இழக்கும்படி செய்ததோடல்லாமல், ஆருயிர் நண்பர்களான ஒருவரின் உயிரை மற்றவர் மாய்ப்பதற்கும் பின் வாங்காத பாவச் செயலுக்கு இலக்காக்கிற்று மலம்.

இத்தகைய மலத்திற்குக் காரணமான தீய பாவனைகளையும், தீய செயல்களையும் அடியோடு அகற்றிக் கொள்ள வேண்டுமானால் தெய்வ சிந்தனை செய்வதைத் தவிர வேறொரு மார்க்கம் இல்லை. இதயத்தைத் தெய்வ பாவனையோடு நிரப்ப வேண்டும். தெய்வத்தை ஆராதித்தல் வேண்டும். அதுவே மானிடனின் மதம். அதாவது நாம் தெய்வீகத் தன் [illegible] வேண்டும்.

[ஆதாரம்: சனாதன சாரதி]

### உதயவாக்கு.

தன்னடக்கத்தின் மூலம் உனது பாவங்கள் நசிவுறும், மனோசக்தி வலுக்கும், மனம் தூய்மையுறும், மேன்மை கிட்டும்.

சுவாமி விவேகானந்தர்

## நாளை

பங்குனி 6

வெள்ளிக்கிழமை

திதி: ஸப்தமி

முன்இரவு: 8.53 வரை

நட்சத்திரம்: கேட்டை

முன்இரவு: 8.45 வரை

சுபநேரம்: 6.18-7.48

ராகு காலம்: 10.48-12.18

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை அடுத்த நூற்றாண்டுக்கு வழிநடத்திச் செல்வாரா வாஜ்பாய்?

இரண்டு வாரகாலத்துக்கும் அதிகமாக புதுடில்லியில் நீடித்த அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலை ஒருவாறு முடிவுக்கு வந்திருக்கிறது. இந்து தேசியவாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாயை புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு ஜனாதிபதி ஆர். நாராயணன் அழைத்துள்ளார்.

எப்படியாவது ஆட்சிக்கு வருவது என்ற பலப்பரீட்சையில் இரண்டாவது தடவையாக வெற்றி பெற்று ஆட்சிப் பீடத்தில் அமர பாரதீய ஜனதாவுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

'மதசார்பற்ற இந்தியா' என்ற வெற்றுக்கோஷத்தை கூச்சலிட்டு வரும் தலைவர்களுக்கும், கட்சிகளுக்கும் பாரதீய ஜனதாவின் புதிய தோற்றம் சிம்ம சொப்பனமாகவே உள்ளது.

திலும் பரம ஏழை நாடாகவே உள்ளது.

ப. சிதம்பரம் போன்ற உலகப் புகழ் பெற்ற நிதி அமைச்சர்களால் வகுக்கப்பட்ட திட்டங்கள் கூட அரசியல் ஸ்திரமின்மை, ஆட்சி மாற்றம் போன்ற காரணங்களால் விரைவாக முன்னெடுக்கப்பட முடியாத நிலையில் உள்ளன. காஷ்மீர் முதல் காவிரி வரை தேசியப் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாமலே உள்ளன.

இந்நிலையில் 15 கட்சிகள் அங்கம் வகிக்கும் பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணி அரசமைக்கவுள்ளது.

இந்திய மக்கள் மட்டுமன்றி உலகம் முழுவதின் கவனமும் தற்போது பிரதமர் வாஜ்பாய் மீதே உள்ளது.

இந்தியாவுக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்

## 'வாஜ்பாய்க்கு என்ன பிடிக்கும்?

71 வயதான வாஜ்பாயை அவரது நெருங்கிய நண்பர்களும், உறவினர்களும் ''பாப்ஜீ'' என்றே செல்லமாக அழைக்கின்றனர்.

பாப்ஜீ ஒரு பிரமச்சாரி. தனது வாரிசாக வளர்ப்பு மகளை உருவாக்கி வருகிறார். நன்றாக சமையல் செய்வது அவருக்கு கைவந்த கலையாம்.

ஓர் இந்து தேசியவாதி என வர்ணிக்கப்பட்டாலும் மீன் சாப்பிடுவதில் அவருக்கு அலாதி பிரியம் என்று நெருங்கியவர்கள் கூறுகின்றனர்,

பத்திரிகைத்துறையில் ஈடுபாடு கொண்ட வாஜ்பாய்க்கு பத்திரிகைக் கேலிச் சித்திரங்களில் ஆர்வம் அதிகம்.

விளையாட்டுத் துறையிலும் ஆர்வம் உண்டு; ஹொக்கியும், உதைபந்தும் அவருக்குப் பிடித்த விளையாட்டுக்கள்.

''வாஜ்பாய் நல்லவர்; அவர் சார்ந்திருக்கும் கட்சிதான் சரியல்ல'' என்கின்றனர் சிலர்.

''பாரதீய ஜனதாக் கட்சிக்கு எதிரான பிரசாரம் இது. நான் இன்றிருக்கும் நிலைக்கு கட்சியே காரணம் என உறுதியாகக் கூறுகிறார் வாஜ்பாய்.

மதசார்பற்ற தன்மைக்கு சாவுமணி என்று சிலர் குரல் எழுப்புகின்றனர். பாரதீய ஜனதாவின் ஆட்சியில் புதுடில்லியை நாகபுரியே (ஆர். எஸ். எஸ். இயக்கத்தின் தலைமையகம்) இயக்கும் என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தியாவில் உள்ள பல கோடி முஸ்லிம்களுக்கு பாரதீய ஜனதாக்கட்சியின் ஆட்சி பெரும் அச்சுறுத்தல் என்றும் சொல்லப்படுகிறது.

அயல் நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ் இலங்கை போன்ற நாடுகளுடன் ராஜீக உறவுகள் பாதிக்கப்படும் சாத்தியக் கூறுகள் உள்ளன என்றும் சிலர் எதிர்பார்க்கின்றனர்.

காந்தி, நேரு போன்றவர்கள் கண்ட இந்தியக் கனவுகளை தற்போதைய நிலைமை தகர்த்து விடும் என்று கூறுபவர்களும் உள்ளனர்.

இந்தியா சுதந்திரம்பெற்ற 50 ஆண்டு காலப்பகுதியில் சுமார் 40 ஆண்டுகாலம் ஆட்சி அதிகாரத்தில் இருந்த காங்கிரஸ் கட்சி நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில் வெற்றி பெறவில்லை. இடையிடையே வந்த கூட்டணி அரசுகளும் பெரிதாக எதையும் சாதித்துவிடவில்லை. இந்தியா இன்னமும் தேசிய அளவிலும், மாநில மட்டத்

கும் பண்புகள் — கட்சிக்கு அப்பால் — அவரிடம் நிறையவே உள்ளன என்பதை பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இந்தியர் அவரிடம் நிறையவே எதிர்பார்க்கிறது. சாதனைகளைப் புரிவதற்கு முன்னர் பல சோதனைகளை வாஜ்பாய் தாண்டவேண்டி உள்ளது.

முதலாவது சோதனையை எதிர்வரும் 29 ஆம் திகதியளவில் அவர் நாடாளுமன்றத்தில் எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

### புதிய பிரதமர்

1926 ஆம் ஆண்டு டிசெம்பர் 25 இல் (கிறிஸ்மஸ தினம்) மத்திய நகரான குவாலியரில் வாஜ்பாய் பிறந்தார்,

ஆர். எஸ். எஸ். இயக்கத்தின் மூலம்தான் வாஜ்பாய் முதலில் அரசியலுக்குள் அடியெடுத்து வைத்தார் என்று கூறப்படுகிறது. எனினும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஓர் அங்கமான ,'அகில இந்திய மாணவர் பெருமன்றத்தின்'' (ஏ. ஐ. எஸ். யூ.) ஊடாகவே அவரது அரசியல் பிரவேசம் ஆரம்பித்தது என்றும் சிலர் கருதுகின்றனர்.

ரஷ்ய மற்றும் பிரெஞ்சுப் புரட்சி பற்றிய நூல்களையும், பிரசுரங்களையும் படித்ததன் மூலமே தமக்கு அரசியலில் நாட்டம் ஏற்பட்டதாக வாஜ்பாய் கூறுகிறார்.

பத்திரிகையாளராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கிய அவர் சிறந்த எழுத்தாளர். மிகச்சிறந்த பேச்சாளர், அருமையான கவிஞரும் கூட.

முன்னாள் பிரதமர் குஜ்ராலைப் போலவே வெளிவிவகாரத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர் வாஜ்பாய்.

1962இல் நடந்த இந்திய–சீனப்போரில் பிரதமர் ஜவஹர்லால் நேரு பின்பற்றிய கொள்கைகள் இந்தியாவுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது என்று துணிந்து எச்சரிக்கை விடுத்த ஓரிரு தலைவர்களில் வாஜ்பாயும் ஒருவர்.

வாஜ்பாயின் அரசியல் குரு



சியாம் பிரசாத் முகர்ஜி ஆவார். இந்து மகாசபையின் தலைவரான முகர்ஜி பிரதமர் ஜவஹர்லால் நேருவின் முதலாவது அமைச்சரவையில் அங்கம் வகித்தவராவார்.

1951இல் பாரதீய ஜனசங்கத்தை முகர்ஜி ஸ்தாபித்தார். அப்போது அதன் நிறுவன உறுப்பினர்களில் ஒருவராக வாஜ்பாயும் இருந்தார்.

அதே காலப்பகுதியில்தான் வாஜ்பாய் ஆர். எஸ். எஸ். இயக்கத்துடனும் தொடர்பு வைத்திருந்தார்.

1957இல் முதன் முறையாக மக்களவைக்குத் தெரிவு செய்யப்பட்டார், தொடர்ந்து மக்களவையிலும், மாநிலங்கள் அவையிலும் மாறிமாறிப் பதவி வகித்து வந்தார்.

1968இல் பாரதீய ஜனசங்கத்தின் தலைவராக வாஜ்பாய் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து 5 ஆண்டுகள் அவர் அப்பதவியில் நீடித்தார்.

இந்திரா காந்தியின் அவசரகாலப் பிரகடனத்தைத் தொடர்ந்து ஜனதாவின் போராட்டத்திலும் தேர்தல் வெற்றியிலும் வாஜ்பாய் முக்

**நல்லூர் தாஸ்**

கிய பங்காற்றினார்.

ஜனதா அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக இரு ஆண்டுகள் பொறுப்பு வகித்தார்.

### மிதவாத தலைவர்

அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் இந்துக் கோயில் ஒன்றைக் கட்டப் போவதாக பாரதீய ஜனதாக்கட்சி தீவிர பிரசாரம் மேற்கொண்டு வந்தது. இது அக்கட்சியின் கௌரவத்தை பெரிதும் பாதிப்பதாய் அமைந்தது. இந்தியாவின் பல கோடி முஸ்லிம்களின் மனங்களிலும் வடுவை ஏற்படுத்தியது.

ஆனால் அவ்வேளையில் கூட பாரதீய ஜனதாவின் தலைவர்களில் வாஜ்பாய் மட்டும் கட்சிக் கூட்டங்களில் இந்தப் பிரசாரத்துக்கு எதிராகக் குரல் கொடுத்து ஒரு மிதவாத தலைவராக விளங்கினார்.

ஆனால் 1992 ஆம் ஆண்டு பாரதீய ஜனதாக் கட்சியின் கூட்டாளிகளான தீவிர இந்து அடிப்படை வாதிகளால் அயோத்தியில் அமைந்திருந்த 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாபர் மசூதி 'கரசேவை' என்ற 'புனித' சேவை மூலம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தினால் இந்தியாவில் வெடித்த நாடு தழுவிய இந்து — முஸ்லிம் கலவரங்கள் காரணமாக 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பலியாகினர். இதனால் உலகம் முழுவதும் பாரதீய ஜனதாவின் புகழுக்கு இழுக்கு ஏற்பட்டது.

அதன் பின்னர் சேதப்படுத்தப்பட்ட கட்சியின் பெருமையை மீளக் கட்டியெழுப்புவதற்கு வாஜ்பாயின் தலைமைத்துவமே காரணமாயிற்று.

வாரா?

சாண்ஏறி முழம் சறுக்கும் இந்தியப் பொருளாதாரத்துக்கு மறுமலர்ச்சி அளிப்பாரா?

வாஜ்பாய் பிரதமராகப் பொறுப்பேற்பார் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து இந்தியாவின் நிதிச்சந்தை ஸ்திரமான ஒரு நிலைக்கு வந்திருப்பதாக நிதித்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

539 ஆசனங்களைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில் பாரதீய ஜனதாவுக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்குமாக 264 ஆசனங்களை உள்ளன. 12 ஆசனங்கள் வென்றுள்ள

## வாஜ்பாயின் கவிதை

சில ஆண்டுகளுக்கு முன்னர் தனது பிறந்த நாளை ஒட்டி வாஜ்பாய் எழுதிய கவிதை வரிகள் இவை:-

காலமாற்றத்தில்
எனது நம்பிக்கைகள்
தளர்கின்றன....
இறந்தகாலம், எதிர்காலம்
பற்றிய கவலையில்
நிகழ்காலப் போரில்
தோற்று நிற்கிறேன்...!

இந்தக் கவிதை வரிகளை பிரசுரித்த இந்திய சஞ்சிகை ஒன்று அதன் கீழே அடிக்குறிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளது. "வாஜ்பாய் விடயத்தில் இந்தக் கவிதை வரிகள் நிகழ்கால உண்மையாகி விடக்கூடாது என்ற கவலை நமக்கும் உண்டு" என்பதே அது.

சிறிது சிறிதாக வளர்ச்சி கண்டு தற்போது நாடாளுமன்றத்தில் தனிப்பெரும் கட்சியாக அது மலர்ந்துள்ளது.

வாஜ்பாயின் சரளமான பேச்சு வன்மை, அரசியல் நாகரிகம், புத்திசாதுரியம், கவித்துவ உள்ளம் என்பனவே பலரும் அவரை விரும்பக் காரணங்களாக உள்ளன.

வெள்ளை நிற வேஷ்டியும், நீண்ட சேர்ட்டும் அணிந்து அந்த 81 வயதான மனிதர் தனது கட்சிக்கு மறுவாழ்வு அளித்தது போன்று இந்தியாவின் ஸ்திரத்தன்மைக்கு புது வடிவம்கொடுப்பாரா?

21 ஆம் நூற்றாண்டுக்குள் சுழலும் உலகில் ''இந்தியா'' வின் தனித்துவமான முத்திரையை பிரகாசிக்கச் செய்

தெலுங்கு தேசம் கட்சி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளப் போவதில்லை என அறிவித்துள்ளது. எனவே பாரதீய ஜனதா அரசுக்கு உடனடியாக ஆபத்து எதுவும் இல்லை என்று அவதானிகள் கருதுகின்றனர்.

எதிர்க்கட்சிகளான இந்திய தேசிய காங்கிரஸ், ஐக்கிய முன்னணி என்பனவற்றில் உள் வீட்டுப் பிரச்சினைகள் பிளவுகளாக வெடித்துள்ளன. இதனால் வாஜ்பாய் தனது அரசை நடத்திச் செல்வது தற்போதைக்கு சுமுகமாகவே இருக்கும் என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர்.

★

# தி. மு. கழக ஆட்சியை கலைப்பது நியாயமானது

## கோபாலசாமி அறிக்கை

சென்னை, மார்ச் 19

கருணாநிதி அரசு அகற்றப்படுவது தான் நியாயமாகும்.

இப்படி ம.தி.மு.க.பொதுச் செயலர் வை.கோபாலசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தடுக்க வேண்டிய கடமையைச் செய்யவிடாமல் அரசியல் லாபத்துற்காக காவல்துறையின் கைகளைக் கட்டிப் போட்ட தி.மு.க. அரசு, ஆட்சி செய்யும் தார்மீக உரிமையை இழந்துவிட்டது.

தமிழ் நாட்டில் ஜனநாயகத்தின் ஆணிவேரையே அறுக்கின்ற காரியங்களில் தி.மு.க. அரசு ஈடுபட்டுள்ளதால் இந்த ஆட்சி அகற்றப்படுவதுதான் நியாயம்.

1997 இல் பயணிகள் ரயிலில் குண்டுகள் வெடித்து பலர் இறந்தனர். தேர்தல் நேரத்தில் தஞ்சை மாவட்டம் காலியமங்கலத்தில் குண்டுகள் வெடித்து நான்கு பேர் இறந்தனர்.

அதன் பின்னணியை ஆராய்ந்த போது அது பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களைக் கொல்வதற்காக வகுக்கப்பட்ட சதித்திட்டம் என்பதுதெரியவந்தும் காவல்துறைதன் கடமையைச் செய்யவிடாமல் முதலமைச்சர் கருணாநிதி தடுத்து விட்டார்.

கோவை குண்டு வெடிப்புச்

(9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு செல்ல விரும்புபவர்

# தரகர் மூலம் அனுமதி பெற முயற்சிக்க வேண்டாம்

## சிவில் அதிகாரி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 19

கொழும்பு செல்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவதற்கு விண்ணப்பித்தோர் அதனைப் பெறுவதற்கு தரகர்கள் எவரின் உதவியையும் நாட வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

அவசரமாகப் பயணம் செய்வதற்கான அனுமதி தேவைப் படுவோர் உரிய காரணங்களைத் தெரிவித்து, சிவில் நிர்வாக அதிகாரியிடமே நேரில்தெரிவித்து அதனைப் பெறலாம் என்றும் —

தரகர்கள் எவரின் உதவியையும் நாட வேண்டியதில்லை என்றும் — சிவில் நிர்வாக உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தரகர்களுக்குப் பணம் கொடுத்தோ வேறு விதஉதவி செய்தோ அவர்கள் மூலம் அனுமதி பெற வேண்டியதில்லை. உண்மையான காரணங்களைத் தெரிவித்து சிவில் நிர்வாக அலுவருடனேயே தொடர்பு கொண்டு பயணிகள் தமக்கான அனுமதியைத் தடங்கல் இன்றிப் பெறலாம் என்றும் அந்த உயரதிகாரி தெரிவித்தார். (அ)

# வண்ணை வைத்தீஸ்வரன் மகோற்சவம் 23-ல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 20 தினங்கள் நடைபெறும்.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 8ஆம் திகதி புதன் கிழமை 3 மணிக்கு பிட்சாடனர் உற்சவமும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் 10 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 11 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

மகோற்சவ தினங்களில் காலைத் திருவிழா 9 மணிக்கும் மாலைத் திருவிழா பிற்பகல் 4.30 மணிக்கும் வசந்த மண்டபப்பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

தேர்த் திருவிழா அன்று காலை 7 மணிக்கு விஷேச பூசையும் 8 மணிக்கு பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளி வீதி வலம் வருதலும் தீர்த்தத் திருவிழா அன்று காலை 6 மணிக்கு நடேசர் அபிஷேகமும் தொடர்ந்து 10 மணிக்கு சித்தாமிர்த புஷ்கரணி தீர்த்தக் கேணிக்கு பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி தீர்த்தமாடலும் இடம்பெறும். (அ-7)


மாணவர் நலன்புரி நிதிக்காக
**விஞ்ஞானபீட மாணவர்கள்**
வழங்கும்

**விழிச்சுடர்**
(நாடகம்)

கைலாசபதி கலையரங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.
**22 — 03 — 1998** ஞாயிற்றுக்கிழமை
காலை 10–30 மணி, மாலை 3–30 மணி

அன்பளிப்பு: 20/-, 50/-
அனுமதிச் சீட்டுகள் நுழைவாயிலில்.

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(54147)



**சென்றல் - சென்ஜோன்ஸ்**
**92 ஆவது கிரிக்கெற் பெரும் போட்டி - 1998**

காலம்:- 1998 மார்ச் 20, 21 வெள்ளி, சனி
காலை 9-30 தொடக்கம் மாலை 5-40 வரை.

இடம்:– யாழ். மத்தியகல்லூரி மைதானம்,

நுழைவுக்கட்டண விவரம்
நின்று பார்ப்போர்: ரூ 10/- ] ஒரு நாளுக்கு
ஆசனம் : ரூ. 25/-

நுழைவுச் சீட்டுக்கள் பின்வரும் இடங்களில் பெறலாம்:
1. சி. திருநாவுக்கரசு [உப செயலாளர் - ப. மா. சங்கம்]
23, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
2. திரு. என். இராசதேவன்
ஏ பவர் அன் கோ. லிமிட்டட்,
51, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
3. யாழ். மத்திய கல்லூரி அலுவலகம்

— போட்டி அமைப்புக்குழு

(சி/3152)


## வங்கிக்கிளை

வடமராட்சி, மார்ச் 19

பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளை இன்று வியாழக்கிழமை முதல் பருத்தித்துறை நகரப்பகுதியில் உள்ள பழைய கட்டடத்தில் மீண்டும் இயங்கத் தொடங்குகின்றது.

இது வரை நெல்லியடியில் உள்ள இலங்கை வங்கிக் கிளைக்குரிய கட்டடத்தில் இந்தக் கிளை தற்காலிகமாக இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-173-7)

## சிப்பாயையும் வெள்ளைப்பூரான் கடித்தது

யாழ்ப்பாணம், மார்ச் 19

அல்வாய் மாலுசந்தி இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளைப்பூரான் கடிக்கு உள்ளானார்.

திஸநாயக்க என்ற சிப்பாயே வெள்ளைப்பூரான் கடிக்குள்ளானவர் ஆவார்.

மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று இவர் வெளியேறினார். (இ-109-173-7)

## மக்கள் வங்கி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 19

மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் சேமிப்புக் கணக்கு, மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு, மாணவர் மலர்ச்சிக் கணக்கு ஆகிய கணக்குகளை நடைமுறைப்படுத்தி அத் [illegible]க்கான அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் விழா நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ-8)

**உரிய...**

(ஏழாம் பக்கத் தொடர்)

சம்பவங்களுக்கு எதிர்க்கட்சிகள் மீது முதல்வர் பழி சுமத்தினார்.

துரித வேகத்தில் தீவிரவாதிகளையும் பதுக்கப்பட்ட குண்டுகளையும் கண்டுபிடிக்க முடிந்த காவல் துறையினரால் முன் கூட்டியே இத்தகைய குண்டு வெடிப்புகளைத்தடுத்திருக்க முடியும். ஆனால் கடமையைச் செய்யாதவாறு காவல் துறையை முதல்வர் முடக்கி விட்டார்.

எனவே இப் படுகொலைகள் நடக்க அனுமதித்த குற்றவாளி முதலமைச்சர் தான் என்பதே உண்மை.

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் சில இயக்கங்களைத் தடை செய்ததும் சிலரைக் கைது செய்ததும் மத்திய அரசினை ஏமாற்ற கருணாநிதி மேற்கொண்ட கண்துடைப்பு நடவடிக்கை ஆகும்.

குண்டுப்பட்டி கிராமத்தில் தி. மு. கவினரும் காவல் துறையினரும் மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)


**தேவை**

தமிழ், தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் ஆங்கில தட்டெழுத்து போதிக்கக் கூடிய ஆசிரியை தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும்.

தொடர்பு:
N. S. T. C. A.
116, பலாலி வீதி,
(தராச் அருகில்)
கந்தர்மடம்,
[illegible]


# செயன்முறை பரீட்சைகள் 23இல் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 19

1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான சங்கீத, நடன செயன்முறைப் பரீட்சைகள் யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை வலய கல்வி அலுவலகங்களில் சேகரித்து வழங்குமாறு வலயம் 1 இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்படும். (இ-8)


**கிரிக்கெற் போட்டி**

V. S. P. லஞ் ஒயில், பரிமளா ஸ்ரோர்ஸ்,
பவானி விலாஸ்
ஆகியோரின் ஆதரவில்
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும்
**மணிவதனன் ஞாபகார்த்த**
**வெற்றிக் கேடயத்துக்கான**

7 பேர் பங்குபற்றும் பன்னிரண்டு (12) ஓவர்கள் கொண்ட கிரிக்கெற் போட்டி.

விண்ணப்ப முடிவு திகதி:- **23 - 03 - 98**
அணி ஒழுங்கு தெரிவு :- **24 - 03 - 98**
பிற்பகல் 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில்.

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமிடம்:
**மணி வீடியோ,**
46, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

பிரவேசக் கட்டணம்:- **150/-**

செயலாளர்,
போட்டிக் குழு,
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்.

(சி/3153)


# மரண அறிவித்தல்கள்

அரியாலை

## இரத்தினசபாபதிக் குருக்கள் கணேச சர்மா

இரத்தினசபாபதிக் குருக்கள் கணேசசர்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதிக் குருக்கள் புவனேஸ்வரி அம்மாவின் அன்பு மகனும் இராஜலட்சுமியின் அன்புக் கணவரும், பிறேமராணி பாலசுப்பிரமணியக் குருக்கள், கேமராணி, ரவீந்திர சர்மா, பத்மராணி, சண்முகராசா சர்மா சபாபதிக் குருக்கள், ரமாராணி, ரஞ்சிதசர்மா, பாமராணி ஆகியோரின் பாசமிகு தகப்பனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19 — 03 — 1998 இன்று பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இல. 46, ராணி வீதி, நல்லூர் என்னும் இல்லத்திலிருந்து இறுதிக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,

46, ராணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (54168)

## வேலுப்பிள்ளை தம்பியப்பா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை தம்பியப்பா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற இராசையா, ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசேந்திரம் (நல்லூர் ப. நோ. கூ. சங்கம்), இராஜேஸ்வரன் (சவூதி அரேபியா), ஜெயராணி, ஞானசாந்தி, வசந்தி, சுகந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரேசா, யோகராணி, மரியாதாஸ், ஜெயராஜா, நித்தியானந்தன், பிறேமகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிஜிலா, நிறஞ்சன், நித்தியா, பிரியந்தினி, மியூட்டன், லக்ஸ்ஷனா, றொஷான், விஜிதா, மயூறன், ஜெனர்த்தன், நிரோஜன், டென்சி, அருண்ராஜ், ரவீந்தனா, சோபிகா, பிறேமிகா ஆகியோரின பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19 — 03 — 1998) வியாழக்கிழமை (புதிய நேரம்) பிற்பகல் 3.30 மணியளவில் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி இராஜேஸ்வரன்
(மருமகள்)

34, முதலியார் லேன்,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம். (54178)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடி அபிவிருத்தி பற்றி ஆராய நோர்வே குழுவினர் யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணத்தில் கரையோர மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதுகுறித்து ஆராய்வதற்காக நோர்வே நாட்டைச் சேர்ந்த நிபுணர்கள் குழு நேற்று யாழ். வந்து சேர்ந்தது.

இக்குழுவில் நோர்வேயைச் சேர்ந்த டக்ஜே மார்ட்டினியூசெவ், இலங்கையைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வதிவிடமாகவும் கொண்ட கலாநிதி நடராசா சண்முகரட்ணம், கமலசுறி நிசங்க ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் யாழ். செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடந்த யாழ்ப்பாண மீன்பிடி தொடர்பான கலந்துரையாடலில் இக்குழுவினர் பங்கு பற்றினர்.

யாழ்ப்பாண மீன்பிடி தொடர்பாகவும், மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், மீன்பிடிக்குத் தேவையான உபகரணங்கள் பற்றியும் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

மேற்படி நோர்வே நிபுணர்கள் குழு எதிர்வரும் 24 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கி இருக்கும்.

இவ்வேளைகளில் மீன்பிடி நடைபெறும் இடங்களை நேரடியாகச் சென்றுபார்வையிடுவதோடு, மீனவர்களின் பிரச்சினை குறித்தும் அவர்கள் நேரடியாக அறிந்து கொள்வர் என தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# யாழ். உள்ளூராட்சி சபைகள்: பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

கொழும்பு, மார்ச் 19

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அலவி மௌலானா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். உள்ளூராட்சிச்சபைகளுக்குத் தேர்தல் நடைபெற்றும், அவற்றுக்குத் தெரிவான உறுப்பினர்கள் பதவி ஏற்பதில் காட்டிவரும் மெத்தனப் போக்குக் குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச்சபைகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து அவற்றுக்குத் தெரிவான உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் கட்சிகள் எம்மிடம் தெரிவித்துள்ளன.

அந்தச் சபைகள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அவை மக்களுக்குச் சேவை ஆற்றவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

புத்தாண்டுக்கு முன்னர் அந்தச் சபைகளை நடத்தும் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பு ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அவை எதிர் நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க இந்தச் சந்திப்பு உதவும் என நம்புகின்றேன்— என்றார்.

விரைவில் யாழ்ப்பாணம் வந்து அந்த அமைப்புக்களின் செயற்பாடுகள் குறித்து நேரடியாக ஆராயவிருக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரை பதவியேற்காத சபைகளிலும் அடுத்த வாரத்தில் பதவியேற்பு இடம்பெறவிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## மாநகரசபை கணக்காளர் மீது தாக்கு

மட்டக்களப்பு, மார்ச் 19

மட்டக்களப்புமாநகரசபை கணக்காளர் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எஸ்.கௌஸ்துவமணி என்பவரே தாக்கப்பட்டவர் ஆவார்.

நேற்று முன்தினம் இரவு அவரது உத்தியோக பூர்வ விடுதிக்கு வந்த சிலர் விசாரணைக்கு என அழைத்துச் சென்று அவரைத் தாக்கினார்கள். (இ-21)

## சர்வதேச...

(முதலாம் பக்கத்தொடர்)

அமைப்பின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டுஅம்மான், விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கொள்வனவு செய்பவர் எனச் சந்தேகிக்கப்படும் குமார் ஆகியோரும் அடங்குவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-8)

## சமய

கொழும்பத்துறை, மார்ச் 19

புலோலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா இன்று வியாழக்கிழமை பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. பி. எம். இம்மானுவேல் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மார்ச் 19

தொல்புரம் வழக்கம்பரை அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மணவாளக் கோல விழா (கும்பாபிஷேகதினம்) இன்று வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

கும்பாபிஷேக கிரியைகள் யாவும் ஆலயப் பிரதமகுரு சிவத்திரு. சுந்தரராசக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

கைதடி, மார்ச் 19

நாவற்குழி தெற்கு பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 29 ஆம் திகதி மகேசுர பூசையுடனும், அன்னதானத்துடனும் உற்சவம் நிறைவு பெறும். சிவஸ்ரீ நா. ஹரேந்திரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கிரியைகளை நடத்துவார். (ஐ-ரீ)

## தாக்குதலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

யில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது.

அப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி வெடிச் சம்பவத்தை அடுத்துச் சிலர் தாக்கப்பட்டதாகவும் அவர்களில் இவரும் ஒருவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

# விவசாயக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 19

''கெயர்'' நிறுவனமும், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனமும் இணைந்து நடத்தும் விவசாயக் கருத்தரங்கு நாளை மறுதினம் சனி காலை 8. 30 மணிக்கு மருதனார் மடத்திலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன அதிபர் த. குகதாசன் தலைமையில் இடம்பெறும் இக்கருத்தரங்கிற்கு ''கெயர்'' நிறுவன யாழ். கிளையின் திட்டமுகாமையாளர் கி. அ. அருள்ஞானம் பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) ரி. சிவலோகநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

''யாழ். மாவட்டத்தில் ஒருங்கிணைந்த விவசாயம்'' என்ற தலைப்பில் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரையும், ''யாழ் மாவட்டத்தில் உரப் பசளைக்கான சில மாற்றீடுகள்'' என்ற தலைப்பில் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன விரிவுரையாளர் மு. கந்தசாமியும் —

''பீடைக்கட்டுப்பாட்டு முகாமைத்துவம்'' என்ற தலைப்பில் கெயர் நிறுவனத்தைச் சேர்ந்த வ. கதிரமலையும், ''உயிரியல் வள வீட்டுத் தோட்டம்'' என்ற தலைப்பில் கெயர் நிறுவனத்தைச் சேர்ந்த செல்வி சாருமதி சண்முகசுந்தரம் மற்றும் சி. சிறீதரன் ஆகியோரும் கருத்துரை வழங்குவர். (ஐ-7)

## பாம்பு கடித்தவர் ஆஸ்பத்திரியில்

வடமராட்சி, மார்ச். 19

அல்வாய் வடக்கு சக்கோட்டையைச் சேர்ந்த நபரொருவர் நேற்று முன்தினம் இரவு பாம்பினால் கடியுண்டார்.

வி. சிவலிங்கம் என்பவரே பாம்புக்கடிக்கு இலக்கானவர் ஆவார்.

மந்திகை ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதேசமயம்—

பாம்பினால் கடியுண்டவரின் காயப் பகுதியில் வாயை வைத்து உறிஞ்சிய ஒருவர் மயக்கமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் சிகிச்சை பெற்று வெளியேறினார். (இ-7)

## மெய்வல்லுநர் போட்டிகள்

அச்சுவேலி, மார்ச் 19

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அதிபர் சி. தங்கவேல் தலைமையில் நடைபெறும். கோப்பாய்க் கோட்டக்கல்வி அதிகாரி ஏ. இராசேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-11)

★ ★ ★

திருநெல்வேலி றோ. க. த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சவேரியார் ஆலய வீதியில் (பாடசாலை முன்றலில்) இடம்பெறும்.

அதிபர் திருமதி க. கணேசமூர்த்தி வைபவத்துக்குத் துக்கு தலைமை வகிப்பார். பொறியியலாளர் எம். இராமதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

★ ★ ★

யாழ்ப்பாணம் சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் து. நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறும். (இ-8)

★ ★ ★

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயவருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வெள்ளி பிற்பகல் 1-30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் க. சந்திரசேகரன் தலைமையில் நடைபெறும்.

சங்கானைக் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம் பிரதம விருந்தினராகவும், சங்கானை பிரதேச செயல நிர்வாக உத்தியோகத்தர் மு.சிவராசா, மேற்படி வித்தியாலய முன்னாள் உபஅதிபர் திருமதி க. தர்மலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ-7)

★ ★ ★

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை முன்றலில் அதிபர் த. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தலைவர் பேராசிரியர் சு. மோகனதாஸ், சிறப்பு விருந்தினராக வலயம் 1 முதன்மை ஆசிரியர் சி. செல்வரத்தினம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (இ-3)

## அரசுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்)

இதன் காரணமாகச் சுமார் ஒரு மணி நேரம், அப்பகுதியில் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

பொலீஸாருக்கும், பேரணியினருக்கும் இடையே சிறு சிறு கலவரங்கள் ஏற்பட்டன.

இந்தப் பேரணியில் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் மகன் சஜித் பிரேமதாஸா, கொழும்பு மேயர் கரு ஜயசூரியா மற்றும் ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பங்குபற்றினர்.

''அரசின் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராகவும், மக்களுக்கு ஏற்படும் பொருளாதாரச் சுமைகளுக்கு எதிராகவும் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடத் தயாராகிவிட்டார்கள்'' என்று பேரணி முடிவில் ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (இ-10-3-21-8)

## கிருஷாந்தி...

(முதலாம் பக்கத் தொடர்)

வந்தனர்.

வழக்கு விசாரணை ஆரம்பமாக முன்னர் தாம் இயற்கைக் கடன் கழிக்கப் போவதாக அவர்களில் மூன்று சிப்பாய்கள் சிறைச்சாலை அதிகாரிகளிடம் கேட்டனர்.

கைவிலங்கு இடப்படாத நிலையில் ஒரு பொலீஸார் இவர்களை வெளியே அழைத்துச் சென்ற சமயம் மூன்று பேரும் திடீர் என தப்பி ஓடினர்.

உடனடியாக அங்கிருந்த பொலீஸார் துரத்திச் சென்று 3 ஆம் எதிரியான டி. எம். ஜயதிலகவை மடக்கிப் பிடித்தனர்.

முதலாம் எதிரியான சோமரட்ன ராஜபக்ஷ, 6ஆம் எதிரியான இந்திரஜித் பெரேரா ஆகியோர் தப்பி ஓடிவிட்டனர்.

மீண்டும் நீதிமன்ற விசாரணை ஆரம்பமானபோது இந்த விடயம் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

''கைதிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்க சிறைச்சாலை நிர்வாகம் தவறிவிட்டது. ஏனைய கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமென்று நீதிபதி நிமால் ஈ. திஸநாயக்க சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தப்பி ஓடிய கைதிகளைப் பிடிக்க பிடியாணையை நீதிபதி பிறப்பித்தார்.

அந்த இரு எதிரிகளும் இன்றி வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

அதே சமயம் சிப்பாய்கள் தப்பிய சம்பவம் குறித்து முழு விசாரணை நடைபெறும் என்றும்—

சிப்பாய்கள் தப்புவதற்கு பொறுப்பாக இருந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிறைச்சாலை ஆணையாளர் ரி. பாஸ்கரசிங்கம் தெரிவித்தார். (இ-3-8-21-10)


LIONAIR (Pvt) Ltd. JAFFNA

★ அழைப்பு ★

லயன் எயர் விமானசேவையின்
யாழ். கிளைக் காரியாலயம் இன்று (19-3-98)
வியாழக்கிழமை முற்பகல் 11. 27 மணிக்கு
திரு. கனகரத்தினம் கேசவன் அவர்களால்
(சட்டத்தரணியும், சமாதான நீதிவானும்,
உத்தியோகப்பற்றற்ற நீதிபதியும்)
திறந்துவைக்கப்படும்.

இந்நிகழ்ச்சி லயன் எயர் நிறுவன
கிளை முகாமையாளர்
திரு. பந்துல செனிவரத்னா அவர்களின்
தலைமையில் நடைபெறும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
S. மனோகரன்,
முகவர்,
லயன் எயர் விமான சேவை.

37, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/3154)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகமனையில் 19-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org